Registered No. M. 2330 'SIDDHANTHA

ACC. NO. 33773 Vol. 25 - No. 3

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கட னடியேனையுந் தாங்குதல்
என்கட னபணி செய்து கிடப்பதே'

மலர் 25 | கர பங்குனி 1952 மார்ச் | இதழ்


உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

20, சடையப்ப முதலி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15



பார்வதி தேவி

(இதன் போட்டோ சென்னை மியூசியத்தாரால்
அன்புடன் அளிக்கப்பட்டது)

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 25 | கர பங்குனி 1952 மார்ச் | இதழ் 3

நாட்டு ஒலி

1. அறநிலைய பரிபாலனம்:—நமது சித்தாந்தத்தில் அறநிலைய பரிபாலனத்தைப் பற்றி அடிக்கடி எழுதிவந்திருக்கின்றோம். அண்மையிலேயும்கூட நாட்டு ஒலி என்ற பகுதியில் இரண்டுமுறை எழுதியிருக்கின்றோம். அதில் தென்னாட்டில் எவ்வாறு அறநிலைய பரிபாலனம் நாளது வரை செய்யப்பட்டு வந்தது என்று சுருக்கமாகக் கூறி, தற்போது இயற்றப்பட்டிருக்கும் பரிபாலனச் சட்டம் எவ்வகையில் மாறுதல் செய்திருக்கின்றது என்று விவரமாகக் கூறி, அம் மாறுதல்களினால் எவ்வாறு பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் கூறியுள்ளோம். தற்போது நமது சமயநிலையங்களை ஆட்சிபுரிவது அந்தச் சட்டம்தான். அச் சட்டத்தின்படி ஏற்கனவே இருந்த அறநிலைய பாதுகாப்புக் கழகம் எடுபட்டுப் போய்விட்டது. அதற்குப் பதிலாக, பரிபாலிக்கும் உரிமை அரசியலாருக்கே வந்துவிட்டது. அவ்வுரிமையை ஏற்றுக்கொண்டு கழகத்தாரின் சொத்துக்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொண்டது. சமயநிலையங்களை ஆட்சிபுரியும் பொருட்டு அரசியலார் தம்முள் ஒரு அலுவல் பகுதியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அப்பகுதியினரே தற்போது ஆலயங்களையும் மற்ற சமயநிலையங்களையும் பரிபாலிக்கின்றார்கள். இந்தப் பரிபாலனச் செலவை சமயநிலையங்களின் சொத்துக்களிலிருந்து வசூலிக்கின்றார்கள். தற்போது வசூலிப்பவர்கள் அரசியலார் ஆகையினால் அந்த வசூல் தொகை ஒரு வரி என ஏற்படும். அவ்வாறு புதிதாக ஒரு வரி ஏற்படுத்த

இராஜ்ஜிய அரசாங்கத்தாருக்கு உரிமை உண்டா என்பது ஒரு கேள்வி.

அவ்விதமாக வசூல் செய்வது ஆலயங்கள், கட்டளைகள், மடங்கள் என்ற மூன்றுவகை நிலையங்களிலிருந்து மாகும். ஆலயங்களிலிருந்து வசூல் செய்யும் பொறுப்பு கழகத்திற்கு முன்னமே தரப்பட்டிருந்தது. அதை இப்பொழுது அரசியலார் ஏற்றுக்கொள்ள முடியுமா? இனி மடங்கள் என்ற நிலையங்கள் இவ்வித வரி வசூலுக்கு உட்படக் கூடுமா? அவ்வசூலை அரசியலார் செய்ய முடியுமா? என்பது மற்ருெரு கேள்வி. இவ்விரண்டும் போகலாக, மடங்களைக் குறித்து மேல்பார்வை செய்ய அரசியலாருக்கு என்ன உரிமை? தற்போது ஏற்பட்டுள்ள பாரத அரசியல் நிர்ணயச் சட்டப்படி இவைகளெல்லாம் செல்லுமா? என்பது முதலில் எழும்படியான ஒரு கேள்வி. இந்தக் கேள்விகள் எல்லாம் எழுப்பப்படும் என்று சென்னை அமைச்சர் குழாம் நினைக்கவில்லை போலும். ஆனல் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

2. **உயர் நீதிமன்றத் தீர்ப்புகள்:**—மேற்கூறிய சட்டம் செயல் முறைக்குக் கொண்டுவந்த உடனே சென்னை ராஜ்யத்தில் இரண்டு பெரிய நிலையங்கள் இக்கேள்விகளை எழுப்பிக்கொண்டு சென்னையில் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தன. அவற்றுள் ஒன்று மடம், மற்ருென்று கோயில். தென் கன்னடம் வட்டத்தில் புகழ்பெற்ற புனிதத் தலமாகிய உடுப்பியில் உள்ள ஒரு மடமும், தமிழ் நாட்டில் மிகப் புகழ் பெற்ற கோயிலாகிய சிதம்பரத்து ஆலய நிர்வாகிகளும். நீதி மன்றத்தில் புகுந்தார்கள். உடுப்பி மடத்தாரோ, தங்கள் மடம் ஒரு பொது நிலையம் அல்லவென்றும், அதன் சொத்துக்கள் மடாதிபதியாகிய ஆசாரியனுக்குச் சீஷர்கள் சமர்ப்பித்த காணிக்கைகள் என்றும், அச்சொத்துக்கள் அவருக்கே பாத்தியப்பட்டவை என்றும், அரசியலார் அதில் ஒரு காசேனும் எடுக்க உரிமை அற்றவர்கள் என்றும், தற்போதைய நிர்ணயச் சட்டம் அவ்வித உரிமைகளுக்கு இடம் கொடுக்கிறதில்லை என்றும், சென்னைச் சட்டமே தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் வாதாடினர்கள். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதி மன்றத்து நீதிபதிகள், மடத்தார் கூறும் வழக்கு நியாய

மானது என்று கூறி, சென்னை அரசாங்கத்திற்கு விரோதமாகத் தீர்ப்பு அளித்தார்கள்.

இனி இரண்டாவதாக, வழக்குத் தொடுத்த சிதம்பரம் நடராஜப்பெருமான் ஆலய பரிபாலகர்களாகிய பொது தீக்ஷிதர்கள் தங்களுடைய கோயில் தமக்கே உரிமை உள்ளதென்றும், தம்முடைய உரிமைகளை ஆக்கிரமிக்க இராஜாங்கத்தாருக்கு அதிகாரமில்லை என்றும், தங்களைக் கட்டுப்படுத்தவாவது, வரி வசூலிக்காவாவது அரசாங்கத்தாருக்கு உரிமை இல்லை யென்றும், சட்டமும் தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் வாதாடினார்கள். இந்த வழக்கையும் விசாரித்த நீதிபதிகள் வாதிகளின் வழக்குச் சரியானது என்று கூறி, அவர்களுக்கு அனுகூலமாகத் தீர்ப்பு அளித்தார்கள். இவ்விரண்டு தீர்ப்புகளும் அண்மையிலே செய்தித்தாள்களில் விவரமாக வெளிவந்தன. நேயர்கள் படித்து அறிந்திருக்கலாம்.

3. தீர்ப்பினால் ஏற்படக்கூடிய விளைவுகள் :—இந்த இரண்டு தீர்ப்புகளையும் சென்னை அரசியலார் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். ஏனெனில், ஏற்கனவே சட்டத்தை செயல் முறைக்குக் கொண்டுவந்திருந்தார்கள். அதன்படி நியமிக்கவேண்டிய ஆட்களை யெல்லாம் நியமித்துவிட்டார்கள். புதுச்சட்டமும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது என்று சொல்லவேண்டும். இப்படியிருக்க உயர்நீதிமன்றத்துத் தீர்ப்புகள் வெடி குண்டுபோல வரவே அலுவலகங்களில் கலக்கம் ஏற்பட்டிருக்கலாம். ஏனெனில் இந்தத் தீர்ப்புகளின் விளைவு இதுவரை நடந்துவந்ததைப் போக்கடிக்கும் தன்மை கொண்டதாகும். ஆகவே அவ்விளைவை ஒரு சிறிது விளக்குவோம்.

உடுப்பி மடத்து வழக்கில் அரசாங்கத்தார் மடங்களின் மீதும், அவர்கள் சொத்தின் மீதும் அதிகாரம் செலுத்துவதற்கு இல்லை என்று ஏற்படும். மடத்து அதிபதிக்குச் சீடர்கள் ஆசாரியன் என்ற முறையில் சொத்துக்களைக் காணிக்கைகளாகச் செலுத்தி உள்ளார்கள். ஆகவே அச்சொத்துக்கள் தனி முறையில் ஆசாரியனுக்குச் சேர்ந்தவை ஆகும். பொதுச்சொத்து ஆகாத நிலைமையில் அதன் மீது சமயப்பற்றற்ற அரசாங்கத்தார் மேற்பார்வை செய்ய உரிமை தரமாட்டார்கள். ஒரு தனி மனிதனுடைய

சொத்தைக் குறித்து அரசாங்கம் யாதொரு உரிமையும் செலுத்த முடியாதல்லவா, அதுபோலவே ஒரு மடத்தைப் பற்றியும், அரசாங்கம் தலையிடுதல் சரியல்ல, அப்படியிருக்கையில் எவ்வாறு பரிபாலனம் செய்யும் காரணத்தை முன்னிட்டு அரசாங்கத்தார் இம்மடாலயத்தின்மீது வரி இடமுடியும் என்ற ஒரு காரணம் கொண்டு நீதிமன்றத்தார் மேற்கண்ட தீர்ப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக் காரணங்களால் மடங்களின்மீது விதித்திட்ட வரி செல்லாமற்போகும். ஆகவே அதன் காரணமாக ஏற்பட்ட அலுவலகங்களும் மூடப்படவேண்டி வரும்.

இனி இரண்டாவதான சிதம்பரக்கோயில் வழக்கிலும் அதே விளைவுதான் ஏற்படும். சிதம்பரக்கோயிலைத் தமது சொந்தஉரிமையாகப் பொதுதீக்ஷிதர்கள் பாராட்டிவந்திருக்கிறார்கள். கோயிலுக்கு என்று தனிச் சொத்து இல்லையாம். கோயிலில் நடைபெறும் வழிபாடுகளுக்குத் தனித்தனி கட்டளைகள் உண்டு. அவைகளைக்கொண்டு கோயில் ஆராதனை நடத்தப்பட்டுவருகின்றது. பாதுகாப்புக் கழகம் ஏற்பட்டது முதல்கொண்டு கோயில் பரிபாலனத்தில் நுழைந்து, உரிமைகள் பெற அக்கழகம் முயற்சித்தது. ஆனால் அம்முயற்சி பலிக்கவில்லை. தற்போது ஏற்பட்டிருக்கும் சட்டம் வலிமை பெற்றிருக்கிறதினால் பொது தீக்ஷிதர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டி நீதிமன்றம் ஏறினார்கள். நீதிமன்றத் தீர்ப்பினால் அவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. அவர்களுடைய வழிபாட்டு வருமானங்களின் மேல் அரசாங்கத்தார் கட்டணம் விதிக்க வகையில்லாமற் போய்விட்டது. இந்தத் தீர்ப்பு சிதம்பரம் ஒன்றுக்கே அல்லாமல், சிதம்பரம் போன்ற மற்ற கோயில்களுக்கும் அனுகூலமாய் நிற்குமல்லவா ? ஆகவே அப்பேர்ப்பட்ட ஆலயங்களைப் பரிபாலனம் செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் அலுவலகங்கள் நிறுத்தவேண்டியதாக நேரிடும்.

இந்த இரண்டு தீர்ப்புகளினாலும் மடங்களும், ஆலயங்களும் சட்டத்திற்கு உட்படாமல் விலகிவிடக் கூடும். எப்போது வரிவசூல் இல்லையோ, அலுவலகங்களுக்கும் வேலையில்லை. அலுவலக ஆட்களும் நிறுத்தப்படவேண்டி வரும். ஆகவே, சட்டம் வெற்றுச் சட்டமாகிவிடும். இப்படியாயின் இது விபரீதமாக முடியும் அல்லவா ?

4. அரசாங்கத்தார் செய்திருக்கும் உத்தேசம் :— மேலே கண்டபடி விபரீதமாகப் பாதுகாப்புச் செயல்கள் ஏற்படக் கூடுமென்று அரசாங்கத்தார் அறிவார்கள் அல்லவா? அதை உத்தேசித்துச் சென்னை அரசாங்கம் உயர் நீதிபதிகளின் தீர்ப்புகளுக்குமேல் அப்பீல் செய்ய உத்தேசித்தது. டெல்லியிலிருக்கும் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து முந்திய தீர்ப்புகளை மாற்றுவதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். அந்த அப்பீலில் அரசாங்கம் வெற்றி யடைந்தால் உத்தேசித்த அலுவல்கள் நடைபெறும். இல்லாவிடில் விபரீதமாக முடியும்.

இந்தத் தீர்ப்புகள் ஆலயபரிபாலனத்தைப் பலவிதங்களிலும் சோதித்து வருவதினால், இந்து சமயப் பொதுமக்கள் இந்த விஷயத்தில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். தற்போது யாதொன்றும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இதற்காக மகாநாடுகள் கூடியாவது யாதாவதொரு ஒழுங்கான முறைக்குப்' பரிபாலனத்தைக் கொண்டு வரவேண்டி ஆலோசனை செய்வது சிறந்த செயல் அல்லவா?

சமயநிலைய பரிபாலனத்தின் பொருட்டு அருள்திரு. சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் பல ஆண்டுகளாகப் பெரும் முயற்சிகள் எடுத்து வருவதைச் சமய அன்பர்கள் அறிவார்கள். தற்போதும் சுவாமிகள் ஒவ்வொரு வட்டத்திலும் குழுக்களை ஏற்படுத்தி ஆலோசனை செய்வதற்காக முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். அவர்கள் முயற்சி வெற்றி யடைவதாகுக. அந்தந்த வட்டத்திலுள்ள சமயிகள் எல்லாரும் ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தி இனிமேல் நடக்கவேண்டிய பரிபாலன ஒழுங்கைக் குறித்துத் தீர ஆலோசித்து அவைகளை ஒழுங்குபடுத்தமுயற்சிப்பார்களாக.

———

2. தலப்பகுதி

மகேந்திரகிரி

திருவாசகத்தைப் படிக்கும்பொழுது மகேந்திரம் என்ற பெயர் ஐந்து இடங்களில் வருவதைப் பார்க்கிறோம். கீர்த்தித் திருவகவலில்,

மன்னு மாமலை மகேந்திர மதனில்
சொன்ன வாகமம் தோற்றுவித் தருளியும் (9-10)

கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந் திரத்திருந்
துற்ற ஐம்முகங் களாற்பணித் தருளியும் (17-20)

மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை அண்ணல் (100-101)

திருவார்த்தை (43)ல்,

வேடுருவாகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்து தன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்தடி யோங்கள் உய்ய (4)

தூவெள்ளை நீறணி எம்பெருமான்
சோதி மகேந்திர நாதன் வந்து
தேவர் தொழும் பதம் வைத்த ஈசன்
தென்னன் பெருந்துறை ஆளி (9)

என்றும் அருளியிருக்கிறார் மணிவாசகனார். இக்கூற்றுகளால் மகேந்திரம் என்பது ஒரு மாமலையென்றும், அங்கே ஈசன் மகேந்திரவெற்பன், மகேந்திரநாதன்என்றபெயருடன் எழுந்தருளியிருக்கிறான் என்றும், அங்கே ஆகமம் தோற்றுவித்தான் என்றும், அங்கே அவன் வேடுருவாகி இருந்தான் என்றும், அவனைத் தேவர் வந்து தொழுதார்கள் என்றும், வேடுருவாகிய காலத்தில், கெளிற்றுமீனைப் பிடித்து அவைகளில் இருந்து ஆகமங்களைக் கைப்பற்றினன் என்றும், அவ்வாறு கைப்பற்றினபிறகு அவ்வாகமங்களைத் தன் ஐம்முகங்களால் அருளிச்செய்தான் என்றும் முதலாகிய செய்திகளை அறிகிறோம். இன்னும் திருப்படையாட்சியில் (49),

"மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே" (1)

என்றும், பண்டாய நான்மறையில் (48),

"காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்" (3)

என்றும், கீர்த்தித் திருவகவலில்,

வேடுவனாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னில் கரந்த கள்ளமும் (64-65)

என்றும், திருஅம்மானையில் (8),

"அலைகடல்வாய் மீன்விசிறும் பேராசை வாரியன்" (2)

என்றும், மீன் பிடிக்கும் திருவிளையாடல் கூறியுள்ளதை அறிக.

இவைகளினால் மகேந்திரத்திற்கும், மீன்வலை வீசிய திருவிளையாடலுக்கும் சம்பந்தம் உண்டா என்று கேட்கலாம்.

இனி மகேந்திரம் என்பது தனித்தலமா வேறொன்றின் பெயரா எனவும் கேட்கலாம்.

இனித் திருமுறைகளிலே 9 - ஆம் திருமுறையாகிய திருவிசைப்பாவிலே திருமாளிகைத் தேவர் அருளிச்செய்த "உறவாகிய யோகம்" என்ற பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் "மகேந்திர மாமலை" என்ற பெயர் வருகின்றது. அந்தப் பதிகத்தின்படி சிவபெருமான் மகேந்திர மாமலை மேல் உறையும் குறவன், அவன்கேழல்பின் நடந்த வேடன், மகேந்திர வெற்பன், வானேதடவும் நெடுங்குடுமி, மகேந்திர மாமலைமேலிருந்த தேன், மறியேறு சாரல் மகேந்திரம் மேல் இருந்த மருந்து, மகேந்திரச் சாரல் வராகத்தின்பின் கண்டார் கவல வில்லாடி வேடர் கடிநாயுடன் கைவளைந் தான், நீர் அருவி மகேந்திரப் பொன்மலையின் மலைகளுக் கருளும் குரு முதலிய சொற்றொடர்கள் வருகின்றன. இச் சொற்களால் மகேந்திரமலை கைலாயம் என்றும், அங்கு தான் ஆகமம் அருளப்பட்டது என்றும் சிவக்கவிமணி அவர்கள் கருத்து. பெரியபுராணத்திலும் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் 50 செய்யுளில் கைலையில் சிவபெருமான் ஆகமம் அருளியதாகக் கண்டிருக்கிறது.

மற்றோர் ஆராய்ச்சியின்படி, மகேந்திரம் என்பது உத்கல நாட்டில் உள்ள ஒரு மலைத்தொடர் ஆகும். இது புராணங் களிலும் கண்டதே. கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கூறும் மகேந்திரமலை என்பது கஞ்சம் ஜில்லாவில் (இப்போது ஒரிசா அல்லது உட்கலம்) உள்ள ஒரு மலையே. அது பரம் புரத்திலிருந்து தென்மேற்கே 32கல்லில் உள்ளது. சென்னை கல்கத்தா பெரும் வழியில் ஹரிபுரம் விடுதியிலிருந்து (மந்த

சாஜமீன்) செல்லலாம். கடல்மட்டத்துக்கு மேல் 4923அடி உயரத்தில் உள்ளது. நான்கு ஆலயங்கள் அங்கு உள்ளன. இதைத் தவிர கரடுமுரடான கற்களால் கட்டப்பட்ட பல கட்டடங்களும் அங்கு உள்ளன.

அம்மலையில் எல்லாவற்றிலும் மிக உயரத்தில் உள்ளது பெருங்கற்களால் ஆக்கப்பெற்ற ஒரு சிவாலயம். அதன் விமானம் 25 அடி உயரம் உள்ளது. அதில் ஐந்து அந்தஸ்துகளும், நெல்லிக்கனி போன்ற சிகரமும் இருக்கின்றன. அச்சிகரம் ஒருகாலத்தில் இடிவிழுந்து சிறிது சேதம் அடைந்திருக்கிறது. அம்மலைமீது ஒரு சர்க்கார் விடுதி இருக்கிறது. அதற்கு அருகில் மற்றொரு சிவாலயம் இருக்கிறது. அதில் சில கல்வெட்டுகள் இருக்கின்றன. இந்தக் கோயிலின் வாயிலில் இரண்டு இரும்புத் தடிகள் நிற்கின்றன. இவை ஏன் வைக்கப்பட்டிருக்கின்றன என்று விளங்கவில்லை. விடுதிக்குக் கீழே ஒரு கணவாயில் ஒரு நீரோடை ஓடுகிறது. அதன் அருகே மற்றொரு ஆலயம் இருக்கிறது. அதில் சிற்பப்பணி வெகுநன்றாக இருக்கிறது. ஆனால் புல்பூண்டுகள் எங்கும் முளைத்துக் கட்டடத்தையே சிதைத்துவிடும் போலத் தோன்றுகிறது. நான்காவது கோயில் ஒருபண்டையகோயிலில் இருந்த கற்களைக்கொண்டு கட்டியதாகத் தெரிகிறது. இந்த ஆலயங்கள் முந்திய குறுநில மன்னரால் கட்டப்பட்டதென்பர். இத்தலத்திற்கு ஒரு மகாத்மியமும் உண்டு. அது அச்சேறினதாகத் தெரியவில்லை.

இம்மலையின் உச்சியில் உள்ள கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் கோகர்ணேசுவரர். கலிங்க நாட்டு ஆதிகங்கர் வமிசத்து அரசர்கள் இந்த மூர்த்தியை வழிபட்டு வந்தார்கள். அடுத்திருக்கும் இரண்டு கோயில்களில் ஒன்று யுதிஷ்டிரர் (தருமராசர்); மற்றொன்று பீமன் என்ற பாண்டவர்களுடைய கோயில்கள் என்பர். நான்காவது கோயில் குந்திதேவியின் கோயிலாம். பாண்டவர்களுக்கும் இந்த இடத்திற்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. யுதிஷ்டிரர் ஆலயத்து முன்வாயிலில் உள்ள கல்வெட்டின்படி (396/1896) இரண்டு வடமொழிச் சுலோகங்கள் தெலுங்கு லிபியில் எழுதப்பட்டுள்ளன. அவைகளின்படி சோழநாட்டு இராஜேந்திர சோழன் இந்நாட்டின்மீது படையெடுத்து விமலாதித்யனை வென்று

இந்த மகேந்திர மலையின் உச்சியில் ஜயஸ்தம்பம் நாட்டி டினுன் என அறிகிறோம். விமலாதித்யன் (1015 - 1022) ஆண்ட கலிங்கதேச மன்னன் மற்றவன் மச்சினனும். இந்த வடமொழி சுலோகங்களுக்குக் கீழே இரண்டு மீன்களும் ஒரு புலியும் செதுக்கப்பட் டிருக்கின்றன. மீன் குறி பாண்டியனுடையது. அவன் சோழனுடைய சாமந்தனுகை யால் தானும் பொறித்துக்கொண்டான் போலும்; புலி சோழனுடையதே ஆகும். ஆகவே இவை பொறித்ததனுல் சோழர்களுடைய வெற்றி இங்கே நிலைநிறுத்தப்பட்டது.

இனி, குந்தியம்மன் ஆலயத்திற்கு அருகில் மூன்று கல் வெட்டுகள் கிடைத்தன. அவையாவன (397/1896.)

(a) " ...ணையும் எறி...ஹேந்திர...ண்டு மகேந்திரத்தில் ஜயஸ்தம்பம் நாட்... "

(b) "ஸ்ரீ மாஹாநாயக ராஜேந்திர சோழபல்லவரையன், ராஜராஜ மாராயன், மகேந்திரபுரிஸ்வரத்து கொண்டான், விராங்குசமும் விட்டிவாராணமல்ல..."

(c) " விமலாதித்தியனையுங் கலங்கருத்தா... "

இத்தமிழ்க் கல்வெட்டுகளும் வடமொழியில் உள்ள செய்தியையே வற்புறுத்துகின்றன. ஆகவே, அக்காலத்தில் தமிழர்களுடைய படையெடுப்பு மகேந்திரகிரிமட்டும் சென் றிருந்தது. ஜயஸ்தம்பம் நாட்டக்கூடிய மதிப்பு இந்த மகேந்திரகிரிக்கு இருந்தது. ஆகவே, இந்தமலை அக்காலத் திற்கு வெகுஆண்டுகளுக்கு முந்தியே பிரசித்தி பெற்றிருக்க வேண்டும்.

வேறு இரண்டு சாசனங்கள் 397, 395/6 கோகர்ணேசு வரர்ஆலயத்திற்குள் உள்ள குந்தியின் கருப்பக்கிரகத்திற்கு அருகில் உள்ள பலகைக் கற்களில் உள்ளன. ஒன்று சகம் 1045, மற்ருென்று 1055 ஆண்டில் ஏற்பட்டவை. அதா வது 1123, 1133 கி. பி. ஆகும். யசோவர்மன் அனந்த வர்ம சோடகங்கதேவன் காலத்தில் அரசவல்லி மேட போது சித்தையன்மகன் ஹி-கரண பீமநாதன் மகேந்திரத் தில் கோகர்ணேசுவர்க்கு அகண்டதீபம் வைக்கப் பணம் தந்ததைக் குறிக்கிறது. ஆகவே 12-ம் நூற்ருண்டில் இவ் வாலயம் இருந்தது எனலாம்.

சில ஆராய்ச்சியாளர்கள் கூற்றின்படி மாணிக்கவாசக சுவாமிகள் இம்மலைக்கு எழுந்தருளியிருக்கும் பட்சத்தில்

இம்மலைஅக்காலத்திலேயே பிரசித்தி பெற்றிருக்கவேண்டும். அதாவது, 3-வது நூற்றுண்டிலேயே இம்மலை அறிஞர்கள் நடமாடும் மலையாக இருந்திருக்க வேண்டும். அக்காலத்தில் இருந்த ஆலயங்கள் என்னஆயினவோ? இப்போது இருக்கும் ஆலயங்கள் நான்கு. ஒன்று குந்தியிருந்த ஆலயத்துக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டது என்று ஆராய்ச்சியாளர் கருதுகிறபடியால் அவ்வாறு 12-வது நூற்றுண்டிலேயே அழிந்துபோன ஓர் ஆலயம் 3-வது நூற்றுண்டில் இருந்திருக்க முடியும் அல்லவா? அதிலிருந்து ஆராயத்தக்கது.

மணிவாசகர் காலத்தில் மிகப் பிரசித்திபெற்றிருந்தது. பிறகு வெகு ஆண்டுகளாக எவராலும் மதிக்கப்பெறுமல் இருந்து மறுபடியும் 12 - ம் நூற்றுண்டில் பிரபலத்திற்கு வந்தது. அப்போது ஆண்ட கங்க வம்சத்து அரசர்கள் இம்மலையில் இருந்த ஆலயங்களைப் புதுப்பித்திருக்கிறுர்கள். மேலும் தென்னுட்டிலிருந்து வடக்கே படையெடுத்துச் சென்ற இராஜேந்திர சோழன் இந்த நாடுகளை எல்லாம் வென்றுன். அப்போது இந்த மாமலை மிகப் பிரசித்தி பெற்றிருக்கவேண்டும். அதை அனுசரித்துத் தனது வெற்றியைக்காட்டவேண்டி இம்மலைமேல் ஏறி இங்கு தன்வெற்றிக்கு அறிகுறியாக ஒரு ஜெயஸ்தபம் நாட்டியும், மூன்று கல்வெட்டுகளைத் தன் தாய்மொழியாகிய தமிழிலும் பொறித்தான். இது அவனுடைய மொழிப்பற்று இன்னதென்று காட்டுகிறது. இதற்கு முந்தி கரிகால் சோழன் இமயமலையில் தன் புலிக்கொடியைப் பொறித்ததாக நூல்கள் கூறுகிறதில்லையா? அதுபோலவே இவனும் மகேந்திர கிரியில் தன் கொடியைப் பொறித்தான் என அறிகிறேம். இவனே கங்கைவரையில் சென்று வெற்றியுடன் திரும்பினதனுல் கங்கை கொண்ட சோழன் என்று பெயர் பெற்றுன்.

கங்கைகொண்ட சோழன் இம்மலையில் ஜயஸ்தம்பம் நாட்டினபிறகு மக்கள் இம்மலையை மறந்துவிட்டார்கள் போலும். அதற்குப் பின்னுல் வந்த அரசனும் இந்த மலையில் யாதொரு சின்னமும் வைக்கவில்லை. கோயில்களும் பழுதுபார்க்கப் படாமல் அழியத் தொடங்கிவிட்டன. இம்மலையினுடைய பெருமை குன்றிவிட்டது போலும்.

இதனுல் சில ஆண்டுகளுக்கு முந்தி ஒரிசா என்ற உத்கல நாட்டைத் தனியாகப் பிரித்துத் தனி நாடாக ஏற்

படுத்தியபோது இங்நாட்டிற்கு ஒரு கோடைக்கால வசதி ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் அதிகாரிகளுக்கு வந்தது. அப்போது இந்த மலையைக் கோடைகாலவசதியாக நிருமிக்கலாம் என்ற யோசனை பிறந்தது. ஆனால், இம்மலை இப்போது இருக்கும் சீர்கெட்ட நிலைமையை உத்தேசித்து அந்த எண்ணத்தை விட்டுவிட்டார்கள் போலும்.

ஒருவேளை இந்த எண்ணம் நிறைவேறியிருந்தால் மறுபடியும் இந்தமலை முன் இருந்த நிலைமைக்கு வந்திருக்கலாம். ஆனால் அது ஒரு சமயநிலையம் ஆவதற்கு மாறாக ஒரு லௌகிக நிலைக்கு வந்திருக்கும். அந்த நிலைக்கு வராமல் போனதே நன்றன்றோ ?

---

3. சமயப்பகுதி

" சமய வாழ்வு "

[சைவப் புலவர் - வ. செல்லையா, இந்துக் கல்லூரி, கொழும்பு]

ஒருவரது வாழ்க்கையைச் செம்மைப்படுத்துஞ் சாதனங்கள் பல. அவற்றுள் சமயமும் ஒன்றெனக் கூறுதல் மிகையாகாது.

இந் நிலவுலகில் பல்வேறு சமயங்கள் நிலவுவதைக் காண்கின்றோம். ஒருவர் தமது கலையறிவு, மனப்பான்மை முதலியவற்றிற்கிணங்க ஒரு சமயத்தைக் கடைப்பிடித்தொழுக வேண்டும்.

சமயக் கோட்பாடு இல்லாத மக்களினமே இல்லையென்று சொல்லலாம். கொள்கைகளிலே எத்தனையோ பேதங்கள் காணப்படலாம். பழக்க வழக்கங்களிலே எத்தனையோ மாறுதல்கள் இருக்கலாம். ஆனால் தெய்வக் கொள்கைகளிலே ஒரு தன்மையினராய்க் காணப்படுகின்றனர். எல்லோரும் தெய்வம் ஒன்று உண்டு என்று நம்புகிறார்கள். தெய்வமே இல்லை என்பவர்களும் அதன் நிலையில் இயற்கைச் சக்திகளை ஒப்புக் கொள்ளுகிறார்கள். இத்தெய்வக்கொள்கை எக்காலத்தில் தோன்றியதென்று வரையறுத்துக் கூறல் சாலாது. பல்லாற்றானும் ஆராய்ந்து பார்ப்பின், சமய உணர்ச்சி அநாதியாகவே தோன்றி இன்று வரையிலும் பயின்று வந்திருப்பது சரித்திர உண்மையாகும். இன்

னும் மக்களினம் உள்ளவரையிலும் சமயமும் இருப்பது நிச்சயம். இவ்வுணர்ச்சி மக்களினத்துக்கே உயிர்போன்றது.

சமயங்கள் தாம் பலவாயினும், யாம் ஈண்டுப் பேச எடுத்துக்கொண்ட பொருள் சைவசமயத்தை மேற்கொண்டாரின் வாழ்வேயாம்.

இறைவனை வணங்குதற்கும் அவனருள் வேண்டும். இதனை மணிவாசகனார், "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என மிக அழகாக அருளிப்போந்தார். இன்னும் அப்பெருந்தகையார்,

"ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே"

என்றும்,

"தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி"

என்றுந் திருவாய் மலர்ந்தன ஈண்டு எண்ணத் தக்கவாம்.

பண்டைக்காலத்தில் சைவசமய மக்கள் எத்தகைய வாழ்வை மேற்கொண்டனர் என்பதைத் துருவியாராய்வோமாயின், நம் சமயப்பண்பு இற்றென்பது இனிது புலனாகும்.

அறுபான்மும்மை நாயன்மாரின் சரித வரலாற்றை ஆராயின், அப்பெருமக்கள் சமயஞானமும் சமயவாழ்வில் விரிந்த மனப்பான்மையும் கொண்டு விளங்கினார்களென்பது வெள்ளிடைமலைபோல் தெள்ளிதின் விளங்கும்.

நாயன்மார் அறுபத்துமூவரும் தமிழ்நாட்டில் பலவேறு இடங்களில் பலவேறு சாதிகளில் தோன்றினர். இவர்கள் தொண்டுகளும் பல. நாயன்மார்கள் இடத்தானும், மரபானும், சாதியானும், தொண்டானும், தொழிலானும், கோலத்தானும் வேறுபட்டவர்களாயினும் இறைவன்பாற் கொண்ட அன்பில் ஒருமையுணர்வுடையராய்த் திகழ்வாராயினர். இவ்வாறே நம் தேசத்தில் வாழும் மக்கள் பிறப்பாலும், சிறப்பாலும், பிறவற்றாலும் வேறுபடினும் பொது மக்கட் சேவையில் ஒன்றுபட்டவர்களாயிருத்தல் வேண்டும். தெய்வத் தொண்டில் நாயன்மார்கள் வேறுபடாது ஒன்றுபட்டமையான், அவர்கள் வீட்டின்பத்தை எளிதில் அடைந்தார்கள். அவர்கள் இன்றும் திருக்கோயில்களில் பூசிக்கப் படுகிறார்கள்.

அறுபான்மும்மை நாயன்மாரின் நினைவு தோன்றும் போது அன்னாரின் தொழில், சாதி முதலியன மனதில்

தோன்றுகின்றனவா? இல்லையே! சிவனடியார் என்ற ஓரெண்ணமே மனதில் எழுகின்றது. விழுமிய அன்பரான கண்ணப்பரை வேடரென யாராவது கழிக்கின்றனரா? திருக்குறிப்புத் தொண்டரை வண்ணாரென எவராவது ஒதுக்குகின்றனரா? திருநாளைப்போவாரைப் பஞ்சமரென யாராவது தள்ளுகின்றனரா? இவர்கள் இன்றும் கோயில்களில் வைத்துப் போற்றப்படுகின்றனர் அன்றோ?

நாயன்மார்களின் சமய வாழ்வைச் சிறிது ஆராய்வாம். நாயன்மார்கள் கடவுளைச் சிவமென்னும் செம்பொருளை அன்பாகக் கொண்டார்கள். இதனை,

> " ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
> இன்பமே என்னுடை அன்பே "

என்னுந் திருவாசகமும்,

> " அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
> அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
> அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே "

எனவரூஉந் திருமந்திரமும் வலியுறுத்துவனவாம்.

அன்பாகிய சிவத்தை வழிபடும் சமய நெறிபற்றி, நம் நாயன்மார்கள் ஒழுகினார்கள் என்று புலனாகின்றது. சைவம் - சிவசம்பந்தம்; சிவம் - அன்பு; சைவசமயம் அன்புச்சமயம். அன்புச் சமயமாகிய சைவ சமயமே நாயன்மார்கள் கைக்கொண்ட சமயம்.

அடியார்கள் அன்பாஞ் சிவத்தைத் தாய்தந்தை, மனைவி மக்கள், நண்பர்களாகப் போற்றினார்கள்; கோயில்களாக வணங்கினார்கள்; உயிர்களாக வழிபட்டார்கள். இக்கருத்து,

> " ஏழிசையா யிசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
> தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
> மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
> ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூ ரிறைவனையே "

எனவும்,

> " அப்பனீ அம்மைநீ ஐயனுநீ
> அன்புடைய மாமனும் மாமியுநீ
> ஒப்புடைய மாதருமொண் பொருளுநீ
> யொருகுலமுஞ் சுற்றமும் ஓரூருநீ

துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாய் என்னெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீயே"

எனவும் வரூஉந் தேவாரத் திருப்பாசுரங்களிலிருந்துந் தெளியலாகும்.

அடியார்களின் வாழ்க்கையை ஊன்றியாராயும்போது, அப்பெருமக்கள்பால் அன்பெனுமாறு கரைபுரண்டோடியதை யாண்டுங் காணலாம். சுந்தரர் இறைவனைப் பரவையாரின் பொருட்டுத் தூதுவனாகக் கொண்டார். இயற்பகை மனைவியை ஒரு சிவனடியாருக்குத் தானஞ்செய்தார். கண்ணப்பர் கடவுளுக்குப் புலாலுணவு அளித்தார். சண்டேசுரர் சிவபூசையின் பொருட்டுத் தந் தந்தையாரது காலை வெட்டினார். சிறுத்தொண்டர் பிள்ளையை வெட்டிச் சிவனடியாருக்குப் பெருவிருந்தளித்தார். இச் செயல்கள் யாவும் சிவத் தொண்டாகவே பாவிக்கப்பட்டன. காரணம் அன்பேயாம்.

"அரனடிக் கன்பர்செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்"

என்னுஞ் சித்தியாரும் ஈண்டு சிந்திக்கற்பாலதாம்.

இவ்வாறு அடியார்களின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும்போது, சமய வாழ்விற்கு அன்பே அடிப்படையாக நின்று ஒளிர்ந்தது என்பது அங்கையி னெல்லிபோலறியப் படுகின்றது.

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் எரியிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகியகங் குழைவார்க் கன்றி
என்பொன் மணியினை எய்த வொண்ணாதே"

என்னுந் திருமந்திரமும்,

"அன்பே யென்னன்பே யென்றன்பால் அழுதிட்டு
அன்பே அன்பாக அறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யுமது
சாற்றும் பழமன்றே தான்"

என்னுந் திருக்களிற்றுப்படியாரும்,

"இடர்களை யாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனும்—சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு"

என்னுங் காரைக்காலம்மையார் பாடலும்,

" இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் "

என்னும்பெரியபுராணச் செய்யுளடியும் எத்துணை விழுமிய வாக அன்பின் திறனை வெளியிடுகின்றன.

இறைவனிடத்தில் அடைக்கலம் புகுந்த மெய்யன்பர்கள், எவற்றிற்கும் அஞ்சா நெஞ்சுடைய நீர்மையராய் வாழ்ந்தார்கள். இதனை,

" நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் "

என்றும்,

" அஞ்சுவதியா தொன்றும் இல்லை அஞ்சவருவது மில்லை "

என்றும் நாவுக்கரசர் அருளியவாற்றானும் நன்கறியலாம். இறைவன்பால் என்றும் நீங்காத பக்தியுடையார் அவலக் கவலை கையாறு அழுங்கல் முதலியவற்றால் கலங்காமையால் திடசித்தமும் மனச்சாந்தியும் உடையராய்த் திகழ்ந்தார்கள்.

" மண்பாதலம் புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பா றிசைகெட் டிருசுடர் வீழினு மஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பாதிரிப் புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே "

என்றும்,

" வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் றண்கடலும்
மீனம்படிலென் இருசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே "

என்றும், வரும் திருப்பாசுரங்கள் பக்தர்களின் மனநிலையை விளக்குவனவாம். இன்னோரன்ன பாடற்பகுதிகளிலிருந்து,

அடியார்கள் உண்மை, உறுதி, அஞ்சாமை என்னும் மூன்றற்கும் ஊற்ருக உள்ள ஓர் அறநெறிபற்றி ஒழுகினுர்கள் என்பது இனிது விளங்குகிறது.

ஒருவரது பக்தி முக்கியமான ஒரு பேருகும். தெய்வச் சேக்கிழார் பெரியபுராணத்தைப் பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடியுள்ளார். அகமெலாஞ் சிவமணங் கமழும், தெய்வப்புலமை சான்ற சேக்கிழார் பெருமான் ஒரு பக்த சிகாமணி. பக்திச் சுவையில் ஈடுபடப் பண்பட்ட மனம் வேண்டும். அதைச் சேக்கிழார் பெற்றிருந்தார். அறுபான் மும்மை நாயன்மாரது வாழ்க்கையைப் பெரிய புராணத்தில் உயிரோவியமாகத் தீட்டியுள்ளார்.

திருநாவுக்கரசர் நடந்துவருங் காட்சியை ஓர் இடத்தில் சேக்கிழார் படம்பிடித்துக் காட்டியுள்ளார் :

“தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதி யுள்ளே ”

“மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும்மதுரவாக்கில்
சேர்வாரும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற்ருளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையுந் தாமுமாகிப்
பார்வாழத் திருவீதிப்பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச்செல்வார்”

கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலில் விளங்கிய, வித்தகராகிய அப்பர் பெருமானது அழகிய திருக்கோலத்தைச் சேக்கிழார் பெருமான் அருளியிருக்குந் திறம் அன்பர் உள்ளத்தை அள்ளுந் தகையதன்ருே !

சமயவாதங்கள் தொலைந்து நாம் சமய வாழ்வில் சமரச உணர்ச்சி பெறவேண்டும். சமயத்தின் குறிக்கோள் சமரச உணர்ச்சியாக அமையவேண்டும். யாண்டும், சமரச உணர்ச்சி தழைத்தோங்கி மக்கள் இன்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வழுத்துவோமாக.

சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

(தருமையாதீனப்புலவர், சித்தாந்தரத்நாகரம்,
முந்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி)

(மலர். 24. இதழ் 11. பக்கம் 471-ன் தொடர்ச்சி)

(சுக) இவ்வகையவத்தைதன்னி லேய்திடுங் கரணமெல்லாம்
மெய்வகை யிலாடத் துற்று மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம கற்றப் புரிந்திடி லருளா லாங்கே
யைவகை யவத்தை யுய்க்கு மறிவினு லறிந்து கோள்ளே

என்பது மேல் (60) அதீதம் முதலாகச் சொல்லப்பட்ட இவ்வைவகை யவத்தையில் அடையும் எல்லாக் கருவிகளும் அவத்தைகட்குரிய உடம்பின் உள்ளிடங்களுள் ஒருகூறாய புருவநடுவிற் பொருந்திப் புலனுகரும் முறையைக் கண்டு, மிக்க பொய்வகைத் தோற்றத்தை அகற்றக் குருபதேசத்தின் நின்று சாதனம் புரிந்திடில், திருவருட்டுணையால் அப்புருவ நடுவே சுத்த சாக்கிரம் முதலிய அவத்தையுள் அவ்வக்கருவிகள் செலுத்தும். அவ்வுண்மையைக் குருபதேசத்தாலாகும் சாதனாநுபவஞானத்தாலறிந்து கொள்வாயென்பதாம்.

சாக்கிரமுதல் அதீதமீருப்படும் ஐந்தவத்தையும் மீள அதீத முதல் சாக்கிரமீருப்படும் ஐந்தவத்தையும் அவ்வவிடங்களானும் ஆண்டாண்டுத் தொழிற்படுங் கருவிகளானும் ஆண்டாண்டு நிகழும் அநுபவத்தானும் ஒன்றேயன்றித் தம்முள் வேறல்ல. சாக்கிரத்தினின்றிழியுங்காலும் அதீதத்தனின் றேறுங்காலும் கண்டத் தானத்தில் கனவு நிகழ்தலுண்டு. மேனேக்கியவவத்தை, கீழ்நூக்கிய அவத்தை யிரண்டனுள் 'எண்ண வொன்றிலா ததீதம்' (60) என்பது முன்னதை யுணர்த்திற்று. காரிய கேவலம் காரிய சகலம் காரிய சுத்தம் என்னும் முறையிலுணர்த்தக் கருதியதால் 'இல்வகையவத்தை' (61) என்னுமித் திருவிருத்தம் காரிய சகலத்தையும்காரியசுத்தத்தையும் உணர்த்

திற்று. மேல் அதீதம் ஒன்றே காரியகேவலம். ஏனைய நான்கும் காரிய சகலவாத்தையேயாகும்.

சாக்கிரமுதலிய ஐந்தும் கீழ்நோக்கச் சென்று ஒடுங்கும் முறையும் மேல் நோக்கித் தோன்றும் முறையும் பற்றி இருவகைப்படும். அவற்றுள் ஒடுங்கும் முறையது கன்மார்ச்சிப்புக்கு ஏது ஆகலாற் கீழ்ச்செலுத்திப் பிறவிக்கு வித்தாம். தோன்றும் முறையது கன்மநுகர்ச்சிக்கு ஏது ஆகாலாற் பரம்பரையிற் பிறவியறுதற்குக் காரணமாய் மேற்படும். இதயமுதற் றுவாதசாந்தமீறாகிய தானங்களிற் புறக்கரண முட்கரணங்களைப் பற்றியும் பற்றாதும் பிரத்தியாகாரமுதல் ஐவகைப்பட்டு நிகழும் யோகாவித்தையும் அதுபோல ஒடுங்கியும் தோன்றியும் அவ்வாறே பயன் தருவதன்றிப் பிறிதன்று. சாக்கிராதியுள் முதலவத்தையாகிய சாக்கிரத்தானத்தின் கண்ணேயும் சாக்கிரமுதல் ஐந்தவத்தை உளவாம். அவை கருவியான் விடயங்களையறியுஞ் செய்கைதோறும் அதிநுணுக்கமாயிடையீடின்றி நிகழுமாறு நுண்ணுணர்வார் கண்டு கொள்ளப்படும்.

"விரும்பும் அரும்பொருளை வீழ்த்து மயங்கல் ;
இரிந்த அகிலன் பெறுகை ; வருந்தறிவு
தோன்றுதல் ; ஐயம் ; விழுந்தஇடந் தோன்றுதல்என்
றூன்ற ஐந்தும் சாக்கிரத்தின் ஆம்".

என்னும் பெரியோர் திருவாக்கு, சாக்கிரச் சாக்கிராதீதம் முதலிய ஐந்தற்கும் உதாரணம் உணர்த்திற்று.

இவையே யன்றிக் கேவலசகலங்கள் நீங்கிய சுத்தத்தினும் அவ்வாறே ஐவகை அவத்தை உள. அவை பின்னர் உணர்த்தப்படும்.

ஆன்மா அவ்வாறு நிகழுங் காரிய அவத்தைகளை உறுதற்குக் காரணமாகக் கேவலஞ் சகலஞ் சுத்தம் என மூன்றவத்தையுறுவன். அவற்றுட் கேவலமாவது தன் இச்சாஞானக் கிரியைகளின் நிகழ்ச்சி சிறிதுமின்றித் தான்மாத்திரமே உளனாதல். பின்பு தனுகரணாதியோடுங்கூடி அவை ஒருபுடை விளங்கும் அவதரம் சகலம். பின்பு பஞ்சமலங்களும் நீங்கிச் சிவத்தொடுகூடி அவ்விச்சாஞானக் கிரியைகள் எங்குமாய் வியாபித்து விளங்கும் அவதரம் சுத்தம் எனப்படும். அக்காரணாவத்தை மூன்றனை

யும் இக்காரியாவத்தையொடு ஒப்புறுத்தியுணர்த்துஞ் செய்யுள் மேல்வருவதாகும்.

(அஉ) நீக்கமி லதீதம் ஆசு நிறைந்தகே வலமாம் நீர்மை
சாக்கிரம் கலாதி சேர்ந்த சகலமாந் தன்மை யாகும்
ஊக்கமில் இரண்டுங் கூடா தொழியவோர்நிலையினீடுஞ்
சாக்கிரா தீதம் சுத்தத் தகைமைய தாகுந்தானே.

என்பதில், ஆன்மாக்கள் கருவிகள் நீங்கினும் நீங்காத ஆணவமலத்தாலே மறைப்புண்டு மூலாதாரத்திற் கிடக்கும் அதீதம் நீக்கமிலதீதம் எனப்பட்டது. இதுகாரிய கேவலாவத்தை காரணகேவலம் ஆசு நிறைந்த கேவலம் எனப்பட்டது. காரியசகலம் சாக்கிரம் எனப்பட்டது. காரணசகலம் கலாதிசேர்ந்த சகலம் எனப்பட்டது. காரிய சுத்தம் சாக்கிராதீதம் எனப்பட்டது. காரணசுத்தம் சுத்தத் தகைமையது எனப்பட்டது. இக்காரியாவத்தை மூன்றும் அக்காரணவத்தை மூன்றொடும் ஒப்புறுத்தப் பட்டன. அவை காரணம் என்பதையுணர்த்த 'நீர்மை' 'தன்மை, 'தகைமை' என்னும் இயல்பு .(சகசம்) குறிக்குஞ் சொற்கள் நின்றன.

இத்திரு விருத்தத்திற்குச் சிந்தனையுரையாளர், 'நீக்கமில்...கேவல நீர்மையாம்' 'சாக்கிரம்......தன்மை யாகும்' 'ஊக்கமில்......ஆகும்' என்ற மூன்றும் முறையே பாசத்தின் சொரூபலட்சணமும் தடத்தலட்சணமும் அவ்விரண்டுங் கூடாத சுத்தாவத்தை முடியுந் தானமும் உணர்த்திய என்றருளினர். 'ஓர் நிலையில் நீடும் வியாபக அறிவே வீடுபேற்றிற் குரித்து' என்றும் அவரருளியதும் உணரற்பாலது.

காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் இலக்கணம் சிதம்பரநாத முனிவர் உரையுள், காரணவத்தை மூன்றனையும் உணர்த்தியதாக மட்டும் காணப்படுகின்றது. காரியாவத்தைகளைத் தரிசிப்பித்து, அத்தரிசனங்கொண்டே காரணவத்தைகளையுந் தரிசிப்பித்தருளினர் ஆசிரியர் உமாபதிசிவனார் என்று மதுரைச் சிவப்பிரகாச சுவாமிகளே குறித்தருளினர்கள். திருவிளங்கதேசிகர் அதைப் பின்பற்றி விளக்கினர்.

காரணகேவலம் ஆம்நீர்மை காரியகேவலமாகிய அதீதத்துக்கும், கலாதிசேர்ந்த சகலமாந்தன்மை சாக்கிர (காரிய சகல)த்துக்கும் ஆகும் என்றார். சுத்தத் தகைமை காரணசுத்தம். சுத்தத் தகைமையதாவது சாக்கிராதீதம் (காரியசுத்தம்), அஃது அதீதமும் சாக்கிரமும் கூடாதொழிய ஒருநிலையினீடுவது. காரியாவத்தையுள் இடையது சாக்கிரம். கீழதும் அதீதம் மேலதும் அதீதம். கீழதீதம் கேவலம், மேலதீதம் சுத்தம். அவை முறையே 'ஆணவத்தோடத்துவிதம்' 'மெய்ஞ்ஞானத் தாணுவினோடத்துவிதம்' எனப் பெரியோராற் குறிக்கப்பட்டன. சுத்தத்திற்கும் இது பொருந்தும்.

இத்திருவிருத்தத்துள் 'ஆசு' என்றதை மாசு எனக் கொண்டது பொருந்தாது. ஆணவத்தை 'ஆசு' என்னும் சொல்லாற் குறிப்பது ஆசிரியர்க்கு வழக்கம்.

1. 'ஆசுட னடங்கப் போக்குமவன்' (திருவருட்பயன், ௪)
2. 'ஆசு ஆதியேல் அணுவதுகாரணம் என்' (ஷை உஅ)
3. 'ஆசு இல் உருவம்' (ஷை அஅ)
4. 'ஆசின்னவா நாப்பண்' (ஷை அகூ)
5. 'ஆசில் சிவப்பிரகாசம்' (சிவப்பிரகாசம், கஉ)
6. 'ஆசிலா ஆன்மலாபம்' (ஷை எஉ)
7. 'ஆன்மாத் திரோதம் ஆசு அருள்சிவம்' (ஷை கூஉ)
8. 'ஆசுறு திரோதமே வாதகலுமா(று)' (ஷை கூ௩)
9. 'ஆசொழிய ஆன்மசித்தைச் சுத்தவித்தை பிரியாதறியுநெறி' (ஞானபூசை உ)
10. 'ஆசில் எழில் தடித்தயா' (கோயிற்புராணம் க)
11. 'ஆசகலம் அடியருளத் தப்பனுட னிருக்கு முன்னை' (சித்தியார், ௩)

என்று வருதலை நோக்கியுணர்க. 'ஊக்கமில்' என்ற பாடமே உண்மையாதலை முதலடியையும் மோனையையும் நோக்கியறிக. சாக்கிராதீதம் எண்பதாவது திருவிருத்தத்தால் விளக்கப்பட்டது.

௩. தன்னுண்மையுணர்த்துந் தன்மை
ஆன்மாக்கள்விடயங்களை உணரும்முறைமையுணர்த்துவது

(௮௩) மருவிய பொறியி லொன்று மாபூத மைந்திலொன்றுங்
கருவிக ளைந்து நீங்காக் கலாதிக ளைந்துங் கூடி

யொருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிருமொன்றைத்
தெரிவுறு தவனொ ழிந்தத் திரள்களுஞ் செயலி லாவே.

என்பது, தத்தங் கோள்களாகிய புலன்களைப் பொருந்திய ஐம்பொறிகளுளொன்றும், ஐம்பெரும் பூதங்களுளொன்றும், அந்தக்கரணங்கள் நான்கும், நீக்கமின்றி நிற்குங் கலை முதலிய ஐந்தும் ஆகிய சேரும் முறையே ஒருங்கியைந்து ஒருவிடயத்தை ஆன்மா நுகரும். இவ்வொழுங்கின் நீங்கி ஆன்மாவும் ஒருவிடயத்தை அறியான். அவ்வான்மாவின் நீங்கி அக் கருவிக் கூட்டங்களும் தொழிற்படா என்பதாம்.

இங்குச் சிவஞான பாடியத்துள் இதன் விளக்கமா யுள்ள பகுதிகளை அறிவது நன்று. அவையாவன :—

(க) "அவ்வக் கருமங்கட்குரிய அரசுறுப்புக்களெல்லா வற்றோடும் கூடித் தன்காரியம் செய்யும் அரசன்போல இலாடத்தானத்தின், " மருவிய பொறியிலொன்றும் மாபூத மைந்திலொன்றுங் கருவிக ணன்கு நீங்காக் கலாதிக ளைந் துங்கூடித் " தொழிற்படும் பிரேரகாவத்தையினின்று விடயங்களை அநுபவித்து வரும் ஆன்மா அங்ஙனந் தொழிற் படுங் கருவிகளுட் பொறிகளின் தொழிற்பாட்டின்கண் ஊக்கத்தை விளைவித்துடனிற்குஞ் சூக்குமந் தூலமாகிய இருவகைப் பூதங்களும், அவற்றின் கூறாகிய தாத்துவிகங் களுந் தமது சத்தி மடங்கி வினைக்கீடாகத் தொழிற்படாது நிற்குமவத்தையின் ஏனைப் பொறிமுதலியன தொழிற் படினும் மதுகையின்மையின், பொறிகளின் றொழிற்பாடு மெத்தென நிகழுமாகலான், அவ்விடத்திற் கண்டுங் காணாது, கேட்டுங் கேளாது, தீண்டியுந் தீண்டாது, சுவைத் துஞ் சுவையாவாது, முரன்றும் முரலாது இங்ஙனம் விடய நுகர்ச்சியின் மெத்தென நிற்குமவத்தை சாக்கிரம். இதற் குத் தானம் புருவநடு, நேத்திரமென்பாரு முளர். அவர் 'நன்னுதல்' என்பதனை ஆகுபெயராக்கி யுரைப்ப." (சூ. ௪. அதி. ௩. அஞ்சவத்தை.)

இவ்விடத்திற் பிரேரகாவத்தைக்கும் சாக்கிராவத் தைக்கும் உள்ளபேதம் விளங்கும். இப்பேதத்தைப் பலர் உணர்ந்திலர் என்பதை அவத்தைகளைப் பற்றி எழுதிய இடங்களிற் கண்டுகொள்க.

கலாதியும் மூலப்பகுதியும் ஏனைக்கருவிகள் போல இடையிடையே புருடனைக் கூடியும் நீங்கியும் அவத்தைக்

கேதுவாமியல்பினவன்றி, யாங்கணும் உடனாய் நிற்றலின் 'நீங்காக் கலாதிகள்' என்றார்.

(உ) "கலாதி பஞ்சகஞ்சுகம் எனப் பெயர் பெறுதலின், அவை அரசனுக்குக் கவசம் போலும் எனவும், தன் மாத்திரையும் ஐம்பெரும்பூதமுந் தேரூர்வானுக்குத் தேர் போல இந்திரியங்கட்கு ஆற்றல் விளைவித்து நிற்குமெனக் கூறுதலின், அவை ஊர்திபோலுமெனவும் உணர்ந்து கொள்க."

"ஈண்டுக் கூறப்படுஞ் சத்தாதியாவன ஞானேந்திரியங்களானறியப்படும் விடயங்களே யன்றிச் சத்த முதலிய தன் மாத்திரைகளல்லவென்பதற்கு வசனுதியோடொப்ப வைத்து, "விடயப்பல் பரிசனம்" (ஞானமிர்தம் சு) எனக் கூறியதே சான்றாதலறிக. இஃதறியாதார் இவ்வவத்தைக் கண் நிற்கும் முப்பத்தைந்து கருவிகளுட் சத்தாதி யென்றது பெரும்பூதங்கட்குக் காரணமாகிய தன் மாத்திரைபோலும் எனப் பெயரொருமை மாத்திரையே பற்றி மயங்குப. இந்திரியங்கட்கு மதுகையை விளைவிக்குந் தன்மாத்திரைகள் ஆண்டுளவாயின், இந்திரியங்கள் முன்போலன்றி மெத்தென அறிதற்கு வேறுகாரண மின்மையுணர்க. அன்றியும், 'பெரும்பூத முந்தன் மாத்திரையும் (முறையே) குடமும் குடமேற் பூச்சும் போலும்' என்று ஆகமங்களிற் கூறுதலின், அவ்விரு வகையுள் ஒன்று நீங்க மற்றொன்று நிற்குமென்றல் பொருந்தாதெனவும், பூதங்கள் நீங்குமெனவே தன் மாத்திரைகளும் நீங்குமென்பது தானே போதருமெனவும் உணர்க. அற்றாகலினன்றே புடைநூலாசிரியரும் பிரேரக வவத்தையிற் றொழிற் படுங் கருவிகளைக் கூறும் வழிப் பூதங்களைக் கூறவே தன் மாத்திரைக ளடங்குமென்னுங் கருத்தான் 'மாபூத மைந்திலொன்றும்' என்றொழிந்ததூஉம் என்றுணர்க." (சூ. ச. அதி. ரு.)

ரு. "மருவிய பொறியிலொன்றும் மாபூத மைந்திலொன்றுங் கருவிக ணான்கு நீங்காக் கலாதிக ளைந்துங்கூடி—யொரு புலனுகரும்" என்றதுபற்றி ஒரு விடயநுகர்ச்சிக்கண் அவ்வத் தத்துவங்களின் றொழிற் பாடெல்லாம் ஒருங்கே நிகழுமென்பாரும் உளர். "கூடியொரு புலனுகரும்" என்றதற்குத் தாற்பரியம் ஒருவிடயத்தின்கண் அவ்வத் தத்துவங்க

ளெல்லாம் முறையான் நிகழ்ந்த பின்னர் அஃது ஆன்மாவுக்குப் புலனுமென்பதேயா மாகலானும், அங்ஙனங் கொள்ளாக்கால் அவை ஒன்றற்கொன்று ஏதுவாதல் பொருந்தாமையானும், ஒன்றற்கொன்று ஏதுவாகாதவழி, அவ்வத் தத்துவங்களின் றொழிற்பாடு நிகழாவென்பது மேற்காட்டினு மாகலானும், ஒரு விடயத்தைப் புறவிந்திரியம் பொதுவகையான் முன்னுணர, அதன்பின் அவ்விடயத்தை அகவிந்திரியமாகிய மனம் பற்ற, அதன்பின் ஆங்காரம் ஒருப்பட்டெழ, அதன்பின்னர்ப் புத்தி நிச்சயிக்கு மென்பதே முறையெனக்கொள்க. அங்ஙனமின்றி ஒருங்கே தொழிற்படுமென்றல் கால நுட்பமறியாதார் கூற்றேயாமென்றொழிக.

—மனத்தத்துவ ஆராய்ச்சி. சூ. உ - அதி. 2

கருவிகளும் ஆன்மாவுங் கூடி உணருமாயின் உணர்த்துவா னொருவன் எற்றுக்கு என்னும் ஆசங்கையை நீக்குவது வருஞ் செய்யுளாகும்.

(சுச) தனக்கேன வறிவி லாதான் றுனிவை யறிந்து சாரான்
றனக்கேன வறிவி லாத வாயிரு ளறியா சாரத்
தனக்கேன வறிவி லாதான் றத்துவ வன்ன ரூபன்
றனக்கேன வறியா னுவிச் சகலமு நுகருந் தானே.

என்பதில், ‘ தனக்கென அறிவிலாதான் ’ ‘ தத்துவ வன்ன ரூபன் ’ என்னுமிரண்டும் பசுவையும், ‘ தனக்கென அறிவிலாத வாயில் ’ என்றது பாசத்தையும், ‘ தனக்கென அறியான் ’ என்றது பதியையும் குறித்து நின்றன. நிற்கவே, இதன் பொருளை அப்பெயர் கொண்டு விளக்குதல் பொருந்துமென்க.

உணர்த்த உணரும் பசு, தன்னுண்மையாகிய கேவலாதீதம் உற்றுக் கிடக்கும். அது தானாக இத்தத்துவங்களைப்(ப் பாசக் கருவிகளை)க் கூடி யறியாது. சடமாகிய பாசக் கருவிகள், அதீதத்தில் (காராகிருகக் கலியாழ்ந்து) கிடக்கும் பசுவைத் தாமாக அறிந்து சாரும் வலியுடையன வல்ல. தனக்கென்ன ஓரறிவில்லாத அப்பசுவோ பஞ்சவண்ணங்களை யடுத்த படிகம் போலத் தத்துவங்களைக் கூடிச், சார்ந்ததன் வண்ணமா யிருக்கு மியல்பால், அத்தத்துவ ரூபியாயிருக்கும். தன்னியல்பா யிருக்குஞ் சுதந்திரமில்லாதது. பசுவும் பாசமும் இவ்வாறு ஒன்று கூடுதற்குச்

சுதந்திர மின்மையால், பாரிசேடத்தால், பதியே இவ் விரண்டன் சம்பந்தத்திற்கு நிமித்தமாகும் என்பது பெறற் ரும். அப்பதி சர்வஞ்ஞத்துவனாயினும், தனக்கென அறிய வேண்டுவ தொன்றுமில்லாத கர்த்தாவாதலின், அப்பதி யால் இப்பசு சகல தத்துவங்களையும் அறிந்து துய்த்து வாழும்.

இது, பதி பசு பாசம் எனப்படுந் திரிபதார்த்தத்துள், பசு பாச மிரண்டும் முறையே சித்தும் சடமுமாதலாலும், சித்துச் சுதந்திர முடையதன் றாதலாலும், சடம் தானே தொழிற்பட மாட்டா தாதலாலும் இவற்றைக் கூட்டித் தொழிற்படுத்துஞ் சுதந்திர ஞான முடையவன் பதியே என்பது பாரிசேடத்தாற் பெறற்றுமென் றுணர்த்திற்று.

உணர்த்தவே, பதியே கூட்டி யுணர்த்துவான் என்ப தெற்றுக்கு? அவன் நிர்விகாரியாய் நிற்க அவனருளைக் கொண்டு பசுவே கூடியறிந்து வரும் என்பதையும் பசு விற்காகப் பதியே பாசத்தைச் சுட்டி யறிந்துவரும் என் பதையும் மறுப்பது வருஞ் செய்யுளாகும்.

கண்டறி புலன்கள் காணும் கருத்தினு லொருத்தன் ஞானங்
கொண்டுள மறியு மென்னிற் கோள்பவன் முதலி யாகு
மண்டிய வுணர்வு யிர்க்கா மன்னிநின் றறியு மென்னி
லுண்டிட வேண்டு வானுக் கொருவன்வே றுண்ட லாமே. சரு

இதில், ‘கருத்து’ என்றதும் ‘உளம்’ என்றதும் ‘உயிர்’ என்றதும் பசுவைக் குறிக்கும். ‘ஒருத்தன்’ என்றதும் ‘முதலி’ என்றதும் ‘மண்டிய உணர்வு’ என்றதும் பதி யைக் குறிக்கும்.

புலன்களைக் கண்டறியும் பொறிகள் பசு ஞானத்தாற் காணும், பசுஞானங் கொண்டு பொறிகள் தத்தம் புலன் களைக் காணுமாறு போலப் பதிஞானம் கொண்டு பசுக்கள் தமக்கு வேண்டிய விடயங்களை யுணரும் என்னின், கொள் பவன் (பதிஞானத்தைக் கருவியாக் கொள்ளும் பசு) பதி (முதலி) ஆவான். அவ்வாறாதலின்மையால் பதிஞானங் கொண்டு பசு அறியுமென்பது பொருந்தாது. அற்றன்று, பசுவிற்காகப் பதியே நின்றறியு மென்னில், (பசியைப் போக்க) உண்ணவேண்டு மொருவனுக்காக வேறொருவன் உண்டலோ டொக்கும் ஆதலின் அதுவும் பொருந்தாது.

பதிஞானங் கொண்டு பசு முதலியாகி நின்றறிதலும் பசுவின் பொருட்டுப் பதி நின்றறிதலுமாகிய இரண்டும் இல்லை. சிற்றறிவாகிய பசு பேரறிவாகிய பதி அறிவிக்க அறியுமென்றதே இதன் கருத்து.

கருத்தினால் (உயிரால்), கண்டறி புலன்கள் காணும், (அதுபோல) ஒருத்தன் ஞானங்கொண்டு உளம் அறியும் என்பது அவிகார வாதி மதம். மண்டிய உணர்வு (பேரறிவாகிய பதி) உயிர்க்காக மன்னி நின்றறியும் என்பது பரிணாமவாதிமதம். இவ்விரு(வர்) கொள்கையும் இதனால் மறுக்கப்பட்டது.

இங்ஙனம் பதி உணர்த்த உணரும் பசு, அப்பதி கிருத்தியத்தை யறியாமையால், யான் செய்தேன் ; பிறர் செய்தார் என்று சுட்டிக்கொண்டு பதியை இழந்து நிற்கின்ற முறைமைக்கு ஒரு திருட்டாந்த முணர்த்திடும் வருஞ் செய்யுள். (தொடரும்)

---

5. கலைப்பகுதி

வள்ளுவரும் - பண்பும்

(அ. நா. ப. திருஞானசம்பந்தன்)

சைவ சமயத்தின் அடிப்படையே பண்பைக் கொண்டு அமைக்கப் பெற்றதுதான் என்று சுருங்கக் கூறலாம். நம் சமயத்தில் தோன்றிய பெரியார்கள் எத்தனை பேர் உள்ளார்களோ, அவர்கள் அனைவரும் பண்பின் வழிநிற்க வேண்டும். நாம் என்பதையே அறிவுறுத்திச் சென்றிருக்கிறார்கள். திருக்குறள் நமக்கு எதனைக் காட்டி விளக்குகிறது? என்பதை அனைவரும் நன்குணர வேண்டும். வள்ளுவருக்கும் - சைவ சமயத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன? அவரை நாம் ஒரு பொருட்டாக அமைத்துக் கொண்டு, நம் சமயமாம் சைவத்தைப் பற்றிப் பேசிச் செல்லலாமா? திருவெண்ணீற்றைப் பற்றியோ, உருத்திராக்கத்தைப் பற்றியோ, அவர் பேசாது விடுத்திருக்கிறாரே என்கிற ஐயம், நம் ஒவ்வொருவர்பாலும் தோன்றும். இங்ஙனம் தோன்றுவதும் இயற்கையே! சமயத்தில்

உள்ள உண்மை நிலைகளை உணராது, அச் சமயச் சின்னங்கள் மட்டில் உயர்ந்ததென எண்ணுகிறவர்களுக்குச் சடுதியில் ஐயம் தோன்றவே செய்யும். இதன்முகமாக யாம் சமயச் சின்னங்கள் அவசிய மற்றன என்றெண்ணுவதாக யாரும் முடிவுகட்ட வேண்டாம். சமயம், நற்குணங்களின் ஈட்டத்தில் பண்பாகப் பரிணமஞ் செய்கிறது எனின் முதலிற் கண்டு, கொண்டு, போற்றவேண்டியவைகளைப் போற்றியே தீர்த்தல் வேண்டும். சமயம், பண்பை முதலிற் கண்டமையான், பண்பின் நிலையைப் பகரும் வள்ளுவர் நம் இடையில் தோன்றி நிற்கிறார். அவர் வாய்ச் சொற்களால் உண்மைகளை விளக்குகிறார்.

பசுமை வாய்ந்த சோலையின் இடையில், அருவி வெள்ளம் இனிதே புரண்டு செல்லவும், அவ் இன்ப அமைதியிலே அன்பே திரு உருக் கொண்டதென மனிதன் அமர்ந்து, இயற்கை இறையின் எழில்சேர் காட்சியில் இனிதே இலயித்து அமரத்துவங் காண்பதை விடுத்து, வரண்ட பாலை நிலத்திலே, ஒருகாலத்தில் ஆறு சென்றதோ என ஐயுறும் வண்ணம் வரண்ட ஆற்றைக் கண்டு, சிதைந்த உள்ளத்தோடு புகலிடம் இன்றி அலைந்து செல்லும் குஞ்சிப் பறவைபோலத் தத்தளித்துச் செல்கிறானே? வாழ்கிறானே! இதற்குக் காரணம் என்ன என்பதை மக்கள் சிந்திக்கிறார்களா? சிந்தித்தால் வாழ்வு சிதையுமா? சிந்தித்தால் "மதம் மக்களை மயக்கும் அபின்" என்று கூறுவார்களா? ஆழ்ந்து சிந்தித்தால், சமயத்தின் உண்மைகள் மனிதனை உயர்த்துவன அன்றோ! அத்தகைய சமயத்தின் அடிப்படையே பண்பு நெறிதான்! இதனை நீத்து வாழும் மனிதன் நாகரிக வாழ்வு வாழ்வதாக மார்தட்டிக் கூறுவது நியாயமாகுமா? நேர்மையாகுமா? நாகரீகம் என்பது என்ன? பட்டுடை யுடுத்திப் பகட்டாகத் தெருவில் கைகால் வீசி நடப்பதா? அன்றி தினேதினம் திரைப் படக் காட்சிக்குச் சென்று, சொகுசாகப் படம் பார்த்து மனதிற்கு இன்பம் அளிப்பதா? அல்லவே அல்ல! இருக்கவும் முடியாது! மனிதன் குணங்களின் நிறைவால் வாழ்வதே நாகரிகம். குணங்கள் வளர வளர, அறம் வளர வளர, நாகரிகம் உயர்ந்ததாகக் கொள்வர் அறிஞர். சிறந்த குணங்கள் வளர்ந்து, அனேயோரும் நனி - நாகரிகர்களாக

வாழவேண்டும் என்பதையே நமக்கு வள்ளுவர் பெருமான் வழி வகுத்துக் காட்டுகிருர்.

திருவள்ளுவர் எவ்விதத் தனிப்பட்ட சமயத்தையும், பேசிச்செல்லாது, பொதுப் படையாகப் பேசிச் செல்கிருர் என்கிற காரணத்தால், அவர் கருத்துகள் இன்று அனைய சமயங்களுக்கும் வேண்டப் படுகின்றன. இன்று மக்களிடம் திருக்குறள் தனி இடம் பெற்று வருகிறது எனின் மிகையாகாது. பள்ளியில் பயிலும் சிருர்கள் முதல், பல்கலைக் கழகத்தில் பட்டத்தையே குறிக்கோளாகக் கொண்டு பயிலும் மாணவர் வரையிலே, இன்று திருக்குறள் கற்றுக் காலத்தைப் பயனோடு செலவுசெய்கின்றனர்.

வள்ளுவர் புகட்டும் பண்பு நெறி அனைவற்றையும் நம்சமயத்தின்பாலேற்றிக் கணக்கிட்டுக் கண்டால் முற்றிலும் பொருத்தமாகவே இருக்கும். சைவ சித்தாந்தக் கொள்கைகளை மறைமுகமாகக் கொண்டுதான் திருக்குறள் எழுந்ததோ என்ற எண்ணம், அதனைத் தெள்ளிதின் படித்துச் செல்வோர்க்கு விளங்கும். இன்று திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட் டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இன்று சித்தாந்த உண்மைகளை அயல் நாடுகளில், குறள் கருத்துக்களைக் கொண்டு நிலை நாட்ட முடியும். இதற்கு உறுதுணை புரிபவர் வள்ளுவர் அன்ருே? இதனை இன்றைய அறிஞர் உலகம் நன்கு கண்டிருக்கிறது. வள்ளுவர் தம் குறட்பாக்கள் நம் சமயத்திற்கே பெரிதும் துணைபுரிந்து நிற்கின்றன என்ற ஒரு கொள்கை பற்றியும், அன்றியும் பண்பின் அடிப்படையில் தோன்றியது நம் சமயம் என்பதையுங் கொண்டு, அவர் அப்பண்பு நெறிக்கே அழுத்தம் திருத்தமாக ஆக்கந்தேடிச் செல்வதால், அவர் இவ்விடத்தில் இடம் பெறுகிருர் என்பதேஉண்மை.இதனை அறிந்தோர் வள்ளுவர் பெருமையினை பாராட்டி வியவாதிரார். அவர் பண்பால் வரும் பெரும் பயனையும், பண்பற்றிருப்பதால் வரும் பெருங்கேட்டையும், தம் குறள்மூலம் கையாண்டு செல்வதைக் காண்போம்.

பண்புடைமையாற் பேறும் நலங்கள் :

பிறருக்கு நன்மையைக் கொடுத்து இனிமைக் குணத்தின் நீங்காத சொல்லை ஒருவன் சொல்வானுனல், அச்சொல்லானது அவனுக்கு இம்மைக்கு வேண்டிய நீதியை

உண்டாக்கி, மறுமைக்கு வேண்டிய அறத்தையும் உண்டாக்கும்.

நயனின்று நன்றி பயக்கும் பயனின்று
பண்பிற்றலை பிரியாச் சொல்.

வேற்று வேந்தரிடத்து நன்முகிய உபாயஞ் செய்யும் இடத்துக் குற்ற முண்டாகும். அவ்வவர் குணங்களை ஆராய்ந்து, அவ்வவர் குணங்களுக் கேற்பச் செய்ய வேண்டும். யார் யாருக்கு எவை எவை விருப்பமோ, அவற்றினை அறிந்து பணியாற்றலும் பண்பின்பாற் பட்டதே.

நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

தம்மை மிகத் துன்பம் செய்யும் தன்மையரிடத்தும், கண்ணோட்டம் செலுத்தும் இயல்பினராகிக் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும் இயல்புடையவர்களே பண்புடையவர்கள்.

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

பரம்பரையாக வரும் உயர் குடியினிடத்துப் பிறந்தவர் தாம் வறியவர்க்குக் கொடுக்கும் பொருள் குறைபட்ட காலத்தும், இயன்றமட்டிலாவது கொடுக்குங் குணத்தை விட்டு நீங்கார்.

நல்லகுடிப் பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லைஎன மாட்டார் ரிசைந்து. (ஔவையார்)

வழங்குவ துள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

பண்பின்மையாற் பெறுங்கேடுகள்

பசிமிகுந்தவர் உணவைக் கண்ட உடனே உண்பாரைப் போல, ஆசை மிகுதியாலே தம்மைக் கண்டவுடனே விரும்பப்படும் தோற்றத்தை உடையவராய் இருந்தாலும், நற்குணமில்லாதவராய் இருப்பின் அவர் நட்பைக் கை விடலே நன்று.

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.

எல்லா உயிர்களுக்கும், பிற உயிர்களோடு, சிநேகமாகச் சேர்ந்து வாழ்தல் இல்லாத தீய குணத்தை வளர்க்குங் குற்றமாகிய நோயை இகல் என்று கற்றறிந்தோர் சொல்வர். ஒருவனுக்குத் தீய குணம் இருந்தால் வியாதியைப்போல அது தீங்கு செய்யும்.

இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

தொன்று தொட்டு சான்றோர்களால் கொள்ளப்பட்ட நீதி நூல்களைப் படியாதவனும், அந்நூல் வகுத்த காரியங்களைச் செய்யாதவனும், தனக்கு வரும் பழியை யெண்ணி விலக்காதவனும், நற்குணமில்லாதவனுமாகிய அரசன் பகையானது அவன் மேற்சென்று படை எடுக்கும் வேற்றரசருக்கு நன்மையாகவே இருக்கும் என்பதே. குற்றமற்ற பண்புடையவர் எவராலும், எக்காலத்தும், இகழவோ, வெறுக்கவோ, வெல்லவோ முடியாது.

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலான் பற்றார்க் கினிது.

பகையென்று சொல்லப்படுந் தீமையைத் தரும் செய்கையை ஒருவன் விளையாட்டினிடத்தாயினும் விரும்பத் தக்கதல்ல. விளையாட்டாக மிகப் பழகியது. முதலில் வெற்றியைக் கொடுத்து முடிவில் கேட்டை யூட்டும்.

பகையென்னும் பண்பிலதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று.

ஒருவனுக்கு உள்ள பொருளை அளந்து தெரிந்து அப்பொருள் முழுதும் தம் கைவசப்படும் வரையில் அன்புடைமை காட்டிப் பேசும் தீக்குணமுடைய பொதுமகளிர் நடத்தையை, ஆராய்ந்து, தெளிந்து அவர் இரும்பு விலங்கினின்றும் விடுபட வேண்டும்.

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

சூதாடுங் கழகத்தில் காலங் கழியுமானால் அக் கழிவானது, தம் முன்னோர் சம்பாதித்து வைத்திருந்த செல்வத்தினையும், தன்னுடைய நற்குணங்களையும் கெடுத்து விடும் என்பதே.

பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

பலபேரும் பெற்று பயன் அடைந்து இன்பங்காண முடியாத, செல்வத்தைத் தேடி ஒருவர் வைத்திருப்பினும், அப்பண்பிலாதவர் பெற்ற செல்வம் நல்ல பாலாய் இருப்பினும், நஞ்சை நல்கும் பாத்திரத்தில் ஊற்றப் பெற்ற பால் திரிதற்கே ஒப்பாகும்.

பண்பிலான் பெற்றப் பெருஞ்செல்வம் நன்பால்
கலத்தீமை யாற்றிரிந் தற்று.

நன் மக்கட்கே உரிய குணத்திட்பமில்லாதவர் அரத்தின் கூர்மை போலுங் கூரிய அறிவுடையவராய் இருந்தாலும் அவர் ஓரறிவுடைய மரத்திற்கே ஒப்பாவர்.

அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்.

இலக்கியங்கள் கண்ட சில பண்பற்றவர்கள் :

உள்ளத்தில் ஒன்று எண்ணி, உதட்டில் ஒன்று வைத்து, செய்கையில் மற்ருென்றைச் செய்பவர்கள் பண்பற்றவர்கள். பல காரியங்களைச் சாதிப்பதாக வாய்ப்பறை கொட்டி ஒரு காரியத்தையும் சாதிக்க வகையற்றவர் வீணர்கள், பண்பற்றவர்கள். ஆழ்ந்த கல்வி கேள்விகளில் குணநலங்களில் சிறந்து வாழும் பேறுடைப் பெருமக்களை, அவமரியாதை செய்து வாழ்வோரும் பண்பற்றவர்கள். அரிய நூல்களை கற்றுத் தேராது, தான் கொண்ட கொள்கையே நெறியுடையதென எண்ணுபவர் பண்பற்றவர்கள். செல்வம் என்ற அபினியின், மமதை என்ற போதை தலைக்கேறி, மயக்கத்தில் அறிவைப் பகுத்துணர்ந்து வாழத் தெரியாது தத்தளிப்பவர் பண்பற்றவர்கள். உடனிருந்தே நண்பனிடம் பழகிக் கொண்டு, அவனைக் கெடுக்க வழியைக் கோலித்திட்டந் தீட்டும் தீரர்களும் பண்பற்றவர்கள்தான். இதுவே ஒரு சில இலக்கியங்கள் எடுத்துக் காட்டும் பண்பற்றோர் நெறியாம்.

இதுவரை பண்பின் பயன்தரு தன்மைகளையும், பண்பின்மைதரும்-விளைவிக்கும்,பெருங்கேடுகளையும் கண்டோம். திருவள்ளுவ நாயனுரும் பண்பின்மையால் வருங்கேடு

களையே பெரிதும் வற்புறுத்தி எடுத்து விளக்கிச் செல் கிறார். பண்பின் பயன்களைப் பற்றி அதிகம் பேசவே இல்லை. (இவ்விடம் ஆராய்தற்கு உரியது) பண்பால் பெறும் நலங்கள் பலவும் கண்டோம்; ஆய்ந்தோம்; அமைந்தோம். இப்பொழுது நாம் ஒரு முடிவுக்கு வரவேண் டாமா? சமயம் என்பதுதான் என்ன? நல்ல வாழ்க்கை வாழ குணங்களைச் சமைப்பது சமயம். அது சமைத்து நமக்கு ஒன்றை அளிக்கிறது. அது என்ன? அதுதான் பண்பு. பண்பின் வழிப்படுவது தானே சமயம்? பண்பும் சமயமும் கொண்டுள்ள பெருந்தொடர்பை அடுத்து ஓர் கட்டுரையில் ஆய்வோம்!

வரவேற்பிதழ்*

மங்கையர்க் கரசி வளவர் குலக்கொழுந்(து)
எங்கள் தெய்வம் புகலிமன் அருளால்
பொங்கொளி நீறு எங்கணும் பரப்பினள்
அந்நாள்; இந்நாள் யாங்கணுஞ் சென்று
சைவப் பயிரினைச் சால்புற வளர்த்து
அருந்தொண் டாற்றும் அம்மையீர் வருக!
ஆதிலெட் சுமிஎனும் அரும்பெயர் பூண்டு
அருங்கலைச் செல்வம் அருஞ்சொற் செல்வம்
சிறக்கப் பெற்றுச் செவ்விதிற் பல்லாண்டு
சைவம் பரப்புந் தனித்திருப் பணியில்
முதிர்ந்தகொள் கையராய் முன்வரும் நும்சிறப்பு
எங்ஙன முற்றும் இயம்பிடல் இயலும்!
அருட்பெருங் குரவர் ஞானியா ரடிகள்பால்
சைவத் தமிழ்ப்பொருட் டத்துவங் கேட்டுக்
கந்தர னுபூதிப் பொருட்குறிப் புணர்த்தினிர்!
மங்கையர்க் காம்இம் மாண்பமர் மாநாடு
தொடங்கி வைக்கத் தூயஉள மிசைந்து
இவண்வரும் ஏற்றம் எடுத்தியம் புதுமால்;

---

*குன்றக்குடியில் 23-12-51ல் நடைபெற்ற 46-வது சைவ மங்கையர் மகாநாட்டைத் தொடங்கிவைத்த திருமதி க. ர. ஆதிலெட்சுமி அம்மையாருக்கு மனமுவந்து வழங்கியது.

கருணை நிலவிடு மருணையா தினத்
தெய்வ சிகாமணி தேசிகர் அருளால்
செல்வ மலிந்து சிறந்துவா ழியவே.

வரவேற்புக் கழகத்தார்

வரவேற்பிதழ்*

நற்றுறை மாந்தர் பொற்பொடு போற்றும்
ஈண்டிய புகழ்சேர் பாண்டிநன் னாட்டுறு
குன்றக் குடியமர் குமரவேள் திருவருள்
தெய்வ சிகாமணி திகழருட் பெருக்கில்
சைவசித் தாந்த மாசமா சத்தின்
ஏற்புற எடுத்த நாற்பான் ஆறெனும்
சைவ மங்கையர் தனிமா நாட்டின்
தலைமைப் பேறு தகவொடு பெற்ற
அம்மைமீர் ! வருக ! நல்வர வாகுக !
மன்னிய சைவத் துறைவழி வந்த
குடியினிற் பிறந்து குலவு தமிழ்மொழிக்
காதல் பூண்டு கசடறக் கற்று
மாண்பமர் கலைநல மணாளர் தம்முடன்
செந்தமிழ் சைவம் சிறக்கப் பரப்பும்
இரஜேஸ் வரிஎனும் இன்பெயர் பூண்டுளீர் !
நும்பணி வாழ்த்துதும் நுவல்பே ரவைகளில்
விரிந்தினிது மொழியும் நேரிய ஆற்றலைப்
போற்றுதும் ; நுமதுளப் பொலிவால் தமிழக
மங்கையர் சிறந்து மாண்பயன் பெறுக !
சமயப் பணியைத் தக்கவா புரிந்து
பொன்பொருள் நிறைந்து பொலிந்துவா ழியஎனத்
தெய்வ சிகாமணி திருவருள் தோய்ந்தமர்
அன்பர் குழுவினேம் அமல னடியிணை
மனமொழி மெய்களால் வணங்கிவாழ்த் துவமே.

வரவேற்புக் கழகத்தார்

---

*குன்றக்குடியில் 23-12-51ல் நடைபெற்ற 46-வது சைவ மங்கையர் மகாநாட்டில் தலைமைதாங்கிய திருமதி S. இராஜேஸ்வரி அம்மையாருக்கு மனமுவந்து நல்கியது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம்

46-வது ஆண்டு நிறைவு விழா, குன்றக்குடி மங்கையர் மாநாட்டுத்

தலைமைப் பேருரை

(சு. இராஜேசுவரி, அண்ணாமலைநகர்)

இப்பேரவையில் கூடியிருக்கும் அறிவிற் சிறந்த பெரியோர்களே! உங்கள் திருவடிகட்கு எனது அன்பார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன். கல்வி யறிவிலும், வயதிலும், அனுபவத்திலும் மிகக் குறைந்த அடியேனைச் சமாசத்தார் இப்பேரவைக்குத் தலைமை தாங்க இட்ட அன்புப் பணியை மறுத்தற்கஞ்சியே உங்கள் முன் நிற்கின்றேன்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும்ஓர் குறைவிலை
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

என்பது ஞானசம்பந்தம் பெற்ற திருஞானசம்பந்த மூர்த்திகளது திருவாக்கு.

பெருந்தகை பெண்ணின் நல்லாளொடு இருந்தது. ஆண்டவன் அம்பிகையுடனேயே இருக்கிறார்.

போற்றித் திருவகவலில் மணிவாசகப் பெருந்தகையாரும் "பாகம் பெண்உரு ஆனாய் போற்றி" எனக் கூறி

யுள்ளார். திருச்செங் கோட்டிலே அர்த்த நாரீசுவர வடிவத்தைக் காண்கின்றோமல்லவா? திருநாவுக்கரசு சுவாமிகள் கால் சுவடு படாமலே குளத்தில் மூழ்கி எழுந்து திருவையாற்றை அடைந்தார். ஆண்டவன் காட்சி அளித்தார். எவ்விதம் எனின் "அம்மையும் அப்பனுமாக." கண்ட ஒவ்வொன்றும் ஆண் பெண் வடிவமாகவே காட்சியளித்தன.

மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடிப்
போதொடுநீர் சுமந்தேத்திப் புகுவாரவர் பின்புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்.

இவ்வாறே கிளி, கோழி, குயில், நாரை முதலிய யாவற்றையும் தம் பேடையோடேயே கண்ட காட்சியை இத்திருப்பதிகத்தால் உணர்த்துகின்றார் திருநாவுக்கரசர். அரசர் கண்ட காட்சிகள் யாவும் இறைவனது சத்தியும் சிவமும் ஆம் தன்மையையே விளக்கின. இதனையே,

" சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பரா
முத்தியான முதலைத் துதிசெய "

எனப் பரஞ்சோதி முனிவர் கூறியுள்ளார்.

ஆக இறைவன் சிவமும் சத்தியுமாக இருந்து அடியார்களுக்கு அருள் புரிந்தும், முத்தொழிலை நடத்தியும் வருகின்றான்.

சிவம் என்பது ஓர் அணு முதல் எல்லாப் பொருள்களையும் ஆட்டுவிக்கும் வன்மை உடையது. அது தானே இயங்கும் தன்மையதன்று. எனவே, சிவம் தானே இயங்கும் செயலற்றது. செயலற்ற சிவம் தொழிற் படுவதற்கு "சக்தி" என்னும் துணைக்கருவி தேவை. சக்தியின்றிச் சிவம் இயங்குவதில்லை. சிவமின்றிச் சக்தியும் விளக்கமடைவதில்லை.

இது பற்றியே "சிவமெனும் பொருள் ஆதி சக்தியொடுகூடின் எத்தொழிலும் வல்லதாம். அவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதாம்" என்று சிவானந்த லஹரி எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

இறைவன் உயிர்களிடத்து வைக்கும் இரக்கத்தைத் தயை என்பர். அதுவே அருள் அல்லது கருணை என்பதாகும். "அருளென்ப கருணை சக்தி" என்பது நிகண்டு. திருவருள் என்பது உயிர்களிடத்தில் ஆண்டவன் காட்டும் இரக்கமேயாகும். அம்பிகையே அந்த இரக்கத்தின் அறிகுறியாம். ஆண்டவனின் சக்தியே நம்மீது அவர் காட்டும் பேரிரக்கத்தின் அறிகுறி. ஆகையால் அம்பிகையே பெருங் கருணையின் வடிவமுமாக விளங்குகின்றாள். எங்கள் திருப் பாதிரிப்புலியூர் புராணத்தில் அம்பிகை தோத்திரத்தில் "கரையேற விட்டபிரான் ஒருபாகம் வளர் கருணைப் பிராட்டி" என்ற தொடரால் பாகம் பிரியாதவள், கருணை வடிவமானவள் என்று ஆசிரியர் வணங்கியுள்ளார்.

சைவத்தின் பழமை :—ஆக, இறைவனை அம்மை அப்பனாகக் கொண்டு வழிபடுகின்ற இந்தச் சிறந்த சைவ சமயம் யாரால், எப்பொழுது, எங்கே உண்டாயிற்று என்று பார்க்கப்போனால், அதன் பழமை மிகமிக முற் பட்டுத் தோன்றும். மிகச் சுருக்கமாகக் கூற வேண்டு மானால் "என்று நீ, அன்று நான்" என்றே அதன் தொன் மையைக் கூறிவிடலாம். இந்தியா முழுமையும் ஒரு காலத் தில் சைவம் பரவியிருந்தது. சிந்து நதிக்கரையில் அகழ்ந் தெடுக்கப் பெற்ற பல புதை பொருள்கள் சைவ சமயத்தின் தொன்மைக்குச் சான்றாய் விளங்குகின்றன. அவற்றுள் சிவலிங்கங்களும் அம்மை, கூத்தப் பெருமான், தென்முகக் கடவுள், சூலம், நந்தி முதலிய பிறவும் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. இவைகளிலிருந்து சுமார் கி. மு. 4000 ஆண்டுகட்கு முன்னரே மக்கள் கடவுளைத் திருவுரு வங்களில் வழிபட்டனர் என்றும், தங்கள் துன்பங்களைப் போக்கிக்கொள்ள இவ்வுருவ வழிபாட்டிலேயே நம்பிக்கை வைத்திருந்தனர் என்றும் தெரிகிறது. சிவலிங்க வடிவ மும் கிடைத்ததிலிருந்து அருவுருவத் திருமேனியும், கூத்தப் பெருமான், அம்பிகை முதலிய உருவங்கள் காணப் பெறு தல் கொண்டு உருவத் திருமேனியும் பரத கண்டத்துத் தெய்வ வழிபாட்டில் இருந்தன என்பது புலப்படுகின்றது. ஆக சைவத்தின் தொன்மையை வரையறுக்க வேண்டு மானால், என்று இவ்வுலகம் தோன்றியதோ, அன்றே சைவ சமயமும் தோன்றியது எனலாம். இது பற்றித் தான்

*

கண்ட வுலகைக்கொண்டு காணாத கடவுளையும் நிச்சயிக்க வேண்டும் என்று பெரியோர்கள் கூறிப் போந்தனர்.

சமயம் வேண்டுமா ?—இன்றைய நிலையில் விஞ்ஞான உலகம் ஒருபுறம். ஆராய்ச்சி உலகம் மற்றொரு புறம். இதன் நடுவில் பஞ்சத்தாலும் பட்டினியாலும் மடிகின்ற உலகம் ஒருபுறம். இவற்றிலே புகுந்து சாந்தத்தையும், அமைதியையும், கடவுள் எண்ணத்தையும் நிலைநாட்டச் சமய உலகம் பார்க்கின்றது. இன்று வெகு வேகமாக உலகம் போகும் போக்கில் சமயத்தைப் பற்றி மூன்றுநாள் கூடிப் பேச இதுதானா சமயம் என்று சிலர் கருதுகின்றனர்.

ஒருவனுடைய உயிரானது உடம்போடு கூடியிருக்க அவன் விடுகின்ற ஒவ்வொரு மூச்சும் எவ்வளவு முக்கியமாக வேண்டப்படுகிறதோ, அதுபோலவே உயிரானது இறைவனோடு சேர்ந்திருக்க அவன் ஒவ்வொரு முறையும் கடவுளைப் பற்றி நினைக்கின்ற நினைப்பு முக்கியமாக வேண்டற்பாலதாம். அப்படி இறைவனை நினைப்பதற்கும், அவனை வழிபடுவதற்கும் சமயம் உதவி செய்கிறது. சமயத்தின் மூலமாகத்தான் கடவுளை அடைய முடியும். கடவுளை அடைவதன் பயனாகப் பேரின்பத்தை, நிலைத்த இன்பத்தை உயிரானது அடைகிறது. அதுவரையில் உலகிலுள்ள அழியக் கூடிய பொருள்களில் தன் மனதைச் செலுத்தி அதன் பயனாகச் சிற்றின்பத்தை அனுபவிக்கிறது. ஆகையால், இறைவனைப் பற்றுவதால் பேரின்பமாகிய முக்தியை அடைகிறோம். பேரின்பத்திற்குச் சாதனமாகவுள்ள அறிவை நமக்குத் தருவன சமய நூல்களே. ஆக சமயத்தின் மூலமாகத்தான் இனிப் பிறவாத ஒரு நிலையை நாம் அடைய முடியும்.

சைவம் :—சைவம் என்றால் என்ன என்றும், சைவத்தின் அடிப்படை என்ன என்றும் பார்ப்போம். சைவ சமயத்தின் தலைவனாக 'சிவனை' அன்புருவாகக்கொண்டனர் சைவர். அன்பை அடிப்படையாகக் கொண்டதே சைவ சமயம். இது பற்றியே "அன்பே சிவம்" என்றும் சிவமே அன்பென்றும் கூறினர். இனி, சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான கொள்கை ஒன்றே. ஆதியும் அந்தமும் இல்லாத பொருள்கள் மூன்று. அவை கடவுள்

(பதி), உயிர் (பசு), உலகம் (பாசம்). இவை மூன்றினுள் உயிரானது தன்னை இயல்பாகக் கட்டிப் பிணைத்துள்ள பாசத்திலிருந்து, கடவுளின் திருவருளைத் துணையாகக் கொண்டு விடுபட்டுக் கடவுளின் திருவடியில் பேரின்பத்தை அடைதல் என்பதுதான் சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான உண்மை. இவ்வரிய உண்மையை விளக்குவதற்காகவே பல நூல்கள் ஏற்பட்டுள்ளன.

முப்பொருளுண்மை :-- உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவுகளுள் அடக்கி விடலாம். அப்பிரிவுகள் பதி(கடவுள்), பசு (உயிர்கள்), பாசம் (உலகம், மலங்கள் முதலியன) என்பன. இவ்வாறு பிரிப்பதற்கு முப்பொருளுண்மை என்று பெயர். இம்மூன்றும் ஆதியும் அந்தமுமில்லாமல் என்றும் உள்ளன என்பது சைவ சித்தாந்தத்தின் முக்கியமானதோர் உண்மையாகும்.

கடவுள் :—எட்டு குணங்களை உடையவராயும், ஊர், குணம், உருவம், எதுவுமின்றி, விறகில் தீயைப் போலவும், எள்ளுக்குள் எண்ணெய் போலவும் இருக்கிறார்.

“ அணுவுக் கணுவாய், அப்பாலுக் கப்பாலாய்
விறகில் தீயினன் பாலில்படு நெய்போல் ”

“ ஊரிலான் குணங்குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரிலானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான் ”

என்று கடவுளின் குணங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

சிவத்தின் இயல்பு :—கடவுள் இலக்கணம் கூறும் சிவஞான சித்தியார் முதற் சூத்திரத்துள் கடைசிச் செய்யுள்,

“ சிவன் உருஅருவும் அல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்
பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானும் அல்லன்
தவமுதல் யோக போகம் தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினனே ”

என்று சிவபெருமான் இயல்பினை எடுத்துரைக்கிறது.

உயிர் அல்லது ஆன்மா :—(பசு) உயிர் கடவுளைப் போலவே ஆதியும் அந்தமுமில்லாத பொருள். இவ்வுயிரானது ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலங்களையும் இயல்பாக உடையது.

ஆன்மா சதசத்து :—செம்பில் களிம்பு இருப்பது போல் இயல்பாகவே உயிரில் பாசம் இருக்கிறது. உலகத்தைச் சார்ந்துள்ளபோது இப்பாசம் உயிரை நன்ருய்ப் பற்றிக் கொள்ளும். உலகத்தைச் சாராமல் கடவுளைச் சார்ந்துள்ளபோது பாசம் விலகும். இவ்விரு தன்மையாகவும் உயிரிருப்பதால் இதற்குச் சதசத்து என்று பெயர். அதாவது அசத்தாகிய உலகத்தோடு சேர்ந்தால் அசத்தாகவும், சத்தாகிய சிவத்தோடு சேர்ந்தால் சத்தாகவும் ஆன்மா விளங்குவதால் சத்+அசத்து=சதசத்து என்று ஆன்மாவிற்குப் பெயர் ஏற்பட்டது.

பாசம்:—பாசம் என்பது உயிர்களைக் கட்டிக் கடவுளையும் பேரின்பத்தையும் அடையவொட்டாது குறுக்கே நிற்கும் தடைப்பொருள். இதை ஐந்து கூருக்குவர் : ஆணவம், கன்மம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை என்பன ஐந்து மலங்களென்றும், கடைசி மூன்றையும் மாயை என்ற ஒரு கூற்றில் அடக்கி மும்மலங்கள் என்றும் கூறுவது வழக்கம். இம்மும்மலங்களிலும், மூல காரணமாகவும், ஒழிப்பதற்கு மிகவும் கஷ்டமாகவும் இருப்பது ஆணவ மலமாகும். இதைத்தான் மூலமனம் என்றும் சொல்லுவர்.

உயிர் பாசத்தை நீக்கும் வழிகள் :—இதுவரையில் பதி பசு பாசங்களின் உண்மையையும், இலக்ஷணங்களையும் கண்டோம். இனி உயிர் பாசத்தை நீக்கிப் பதியை யடைவதற்குரிய சாதனங்களையும், அவற்ருல் வரும் பயனையும் கவனிப்போம். மாயையின் சேஷ்டையால் உலக இன்பத்தைப் பெரிதாக எண்ணிஆணவத்தின்சேஷ்டையால் "நான், எனது" என்ற பற்றுக்களை வளர்த்து, கர்மத்தின் சேஷ்டையால் ஆன்மா நல்வினை தீவினைகளைப் புரிவதால் தான் பாசம் ஆன்மாவைக் கட்டியிருக்கிறதென்று மேலே கண்டோம். எனவே பாசம் ஒழிய வேண்டுமானுல் இந்த சேஷ்டைகளையெல்லாம் ஒழிக்க வேண்டும். அதாவது உலக

இன்பத்தைப் பெரிதாக எண்ணக் கூடாது. நான், எனது என்ற பற்றுக்களை வளர்க்கக் கூடாது.

மனம் ஒரு குரங்குபோல் ஏதாவது ஒரு கிளையைப் பிடித்துக்கொண்டே யிருக்கும். இதைப் பற்றுக்கோடு என்று சொல்லுவார்கள். உலகமானது மனதுக்கு ஒரு பற்றுக்கோடு. உலகத்தை விட்டால் மனதுக்கு வேறு ஒரு பற்றுக்கோடு தேவை அல்லவா ? அதுதான் கடவுள் என்ற பற்றுக்கோடு. ஆகையால் உலகத்திற்குப் பதிலாகக் கடவுளை வைத்து உயிரானது தனது வேலைகளை யெல்லாம் செய்வதுதான் பாசத்தை ஒழிப்பதற்கு உபாயமாகும். இந்த உபாயம் நான்கு மார்க்கங்கள் அல்லது நான்கு படிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும்.

சரியை மார்க்கம் :—சரியைத் தொண்டு என்பது கடவுளை எஜமானனாக ஓர் உருவத்தில் கொண்டு எஜமானனுக்கு ஒரு வேலைக்காரன் எந்தெந்த உபசாரங்கள் செய்வானோ அவைகளை யெல்லாம் அவ்வுருவத்திற்குச் செய்தல். அலகிடுதல், மெழுகுதல், பூக்கொய்தல், பூத் தொடுத்தல். இன்னும் இவை போன்ற மற்ற காரியங்களெல்லாம் செய்தல். தனக்கென ஒன்றும் செய்யாமல் கடவுளுக்கென்றே செயல் நிகழ்வதால், ஆணவ மலம் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து வரும். இத்தொண்டைத் தாச மார்க்கம் என்றும் சொல்லுவர். இந்த முறையில் நின்று வழிபாடு செய்தவர் திருநாவுக்கரசு சுவாமிகளாவர்.

கிரியா மார்க்கம் :— கிரியைத் தொண்டாவது உருவத்திலே கடவுளை எழுந்தருளச் செய்து அபிஷேகம் போன்ற பதினாறு வகையான உபசாரங்களைச் செய்து தீயைவளர்த்து அதையும் கடவுள் உருவாக எண்ணி, உயிர்வதையில்லாத வேள்வியைச் செய்தல். இங்கே “நான்” என்ற அகப்பற்றும் “எனது” என்ற புறப்பற்றும் மிகுதியாக நீங்கும். இந்த மார்க்கம் தகப்பன் பிள்ளை என்ற முறையிலிருந்து கடவுளை வழிபடும் முறையாகும். இதற்குச் சற்புத்ரமார்க்கம் என்றும் சொல்லுவர். இம்முறையில் யாராலும் சுட்டிக் காட்டமுடியாத கடவுளை “தோடுடைய

செவியன்" என்று சுட்டிக் காட்டினவர்தான் சம்பந்த சுவாமிகள்.

யோகமும் ஞானமும் :—யோகத்தின் மூலமாக உடம்பி னுள்ளிருக்கும் ஒளிவடிவான கடவுளைக் கண்டு வழிபட்டு இன்பம் அடைதல். "உடம்பினுள்ளே உருபொருள் கண் டேன், உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்று திருமூலர் கூறியவாறு கடவுளை நமக்குள்ளே காணும் முறையாகும். இதைக் கடவுளும் தானும் சிநேகி தர்கள் போல அளவளாவும் தன்மைக்கு ஒப்பிடுவர். இந்த வழியினைச் சகமார்க்கம் என்றும் சொல்லுவர். இம்முறை யில் கடவுளைக் கண்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவை யாவினும் சிறந்தது ஞான மார்க்கமாகும். இதில் ஞான சாத்திரங்களைக் கற்று அதன்படி வாழ்க்கையில் நடந்து ஒழுகுவதாகும். இது தலைவன் தலைவி என்ற முறையில் இறைவனை வழிபடுவதாகும். இதனைச் சன்மார்க்கம் என் றும் வழங்குவர். மணிவாசகப் பெருந்தகையார் இம் முறையில் இறைவனை வழிபட்டவராவர்.

எனவே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளும் ஒன்றன்பின் ஒன்ருகத்தான் நிகழ்தல் வேண்டும்.

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்,
அரும்பு, மலர், காய், கனிபோல் அன்றோ பராபரமே"

என்ற தாயுமான சுவாமிகளது மிகப் பொருத்தமான உவ மைக்கிணங்கச் சரியை என்ற அரும்பு கிரியையாய் மலர்ந்து, யோகமாய்க் காய்த்து, தக்க பருவம் வந்த காலத்தேதான் அது பழுத்து மெய்ஞ்ஞானம் அல்லது இறைஞானம் என்ற தொரு இனிய கனியாகப் பயன் தருவதாகும்.

மேற்கூறிய மார்க்கங்களிலெல்லாம் நின்று இறைவனை நேரே கண்டு அனுபவித்த பெரியார்கள்தான் நமது தெய் வச் சேக்கிழார் நமக்கு அருளிய பெரியபுராணத்திலுள்ள சிவனடியார்களாவர்.

பெரிய புராணத்துள்ள ஒவ்வொரு நாயன்மாரும், தனக்கென வாழாது பிறர்க்காகவே வாழ்ந்து, தாம்

கொண்ட குறிக்கோளுக்கு இடர் வந்த காலத்தில் பல தியாகங்கள் செய்து, "வழுக்கி வீழினும் நின் திருப்பெயர் அல்லால் மற்றுநான் அறியேன் மறுமாற்றம்" என்ற எண்ணத்தோடு வாழ்ந்த பெரியார்கள். யார் பெரியார்? என்ற கேள்விக்கு நம் தெய்வப் புலவர் திருவள்ளுவர், "செயற்கரிய செய்வர் பெரியர்" என்று சொல்லுகின்ருர். அத்தகைய செயற்கரிய செய்கைகளை அவர்கள் செய்ததனுல்தான் இறைவனை நேரே கண்டனர். இன்றும் எல்லோராலும் போற்றக்கூடிய ஒரு நிலையில் அன்று அவர்கள் வாழ்ந்து காட்டினுர்கள். உலகம் உள்ள அளவும் அவர்கள் போற்றப் படுவார்கள்.

சைவ மகளிர் :— இவ்வளவு சிறப்பும் பெருமையும் வாய்ந்த சைவசமயத்திற்கும் பல காலத்தில் பல இன்னல்கள் ஏற்பட்டன என்றும், அதற்குக் காரணம் அரசியல் ஆதரவு கிடைக்காத காலத்தில்தான் மதத்தின் பேரால் பூசல்கள் விளைந்தன வென்றும் சரித்திரம்வல்லார் கூறுவர். இப்படிச் சைவ சமயத்திற்கு இன்னல்கள் நேர்ந்த காலத்தெல்லாம், பல வீரத் தாய்மார்கள் நம் தமிழ் நட்டிலே புகழொடு தோன்றிப், புகழொடு வாழ்ந்து, புகழை நிறுத்திச் சைவத்தை வளர்த்தனர் என்பது மறுக்க முடியாத விஷயமாகும். மற்றும் பலர் கணவன் வழிபாடு, அடியார் வழிபாடு, கடவுள் வழிபாடு முதலியவற்றில் ஈடுபட்டுக் கற்புத் திண்மையும், அகத் தூய்மையும், கனிந்த பக்தியும் உடையவராய் மிக்க மேம்பாடுற்றுத் திகழ்ந்தனர். பலர் பல துறைகளில் தொண்டாற்றினர். அவர்களுள் சிலரியற்றிய பணியின் பெருமை தமதில்லத்தின் அளவோடேயே நின்றது. வேறு சிலர் தம் கொழுநருக்கு உதவியாய் அடியார்களுக்கு அன்னமளித்தல் முதலியவற்றைச் செய்து தம் கணவர் கொண்ட குறிக்கோளுக்கு யாதொரு பங்கமும் நேரிடாமல் பணியாற்றினர். இவற்றிற்குச் சான்ருகப் பல சரித்திரங்கள் உள்ளன. குங்கிலியக்கலய நாயனுர், இளையான்குடிமாற நாயனுர், அப்பூதி அடிகள் இவர்களுடைய மனைவியர்களெல்லாம், தம் கொழுநர் கொண்ட கொள்கைக்குச் சிறிதும் மாறுபடாமல் பணிசெய்ததனுல் தான் அவ்வடியார்களுடைய பெருமை மேன்மேலும் விளங்குவதாயிற்று..

அப்பூதி அடிகள் மனைவியார் பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுள் மூடி, அடியார்க்கு அன்னம் படைத்தார்கள் என்றால் அவர்களுக்கு அடியாரிடத்திருந்த பக்தியும் கடவுளிடத்திருந்த நம்பிக்கையும், தம் கணவனது கருத்துக்கு இடையூறுநேரக் கூடாதென்ற சிறந்த எண்ணமுமல்லவா அத்தகைய சிறந்த செயலைச் செய்தற்குக்காரணமாயின. இப்படி அடியார்களுக்குப் பெருமை வந்ததெல்லாம் அவரது இல்லக் கிழத்திகளால் என்று சொன்னால் மிகையாகாது.

இன்று ஓரளவு சைவம் உலகில் பரவியிருக்கிறது என்றால், அன்று ஒரு வீரத்தாயாம் மங்கையர்க்கரசியாரும், தியாகமே உருவெடுத்த திலகவதியாரும் தோன்றி, சைவத்தை அரசியலோடு பிணைத்து நிலை நிறுத்தி வைத்ததனால்தான். இது அழியாத ஓர் நிகழ்ச்சியாகும்.

இதனால்தான் நம் சேக்கிழார் பெருமான் பெண்களது நுண்ணிய தன்மையை நன்குணர்ந்து இல்வாழ்க்கைக்கு இவர்கள் இன்றியமையாதவர்கள் என்பதையும் தெரிந்து, பெரியபுராணத்தின்கண்ணே இம்மகளிரைப் பலவகையிற் பாராட்டுகின்றனர். இன்று உலகிலே சமய உணர்ச்சி ஒரு வகையில் மக்களிடையே நிலவிவருகிறது என்றால் அது பெண்களால்தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

ஆனால் உலகம் மிக வேகமாகப் போகின்ற இக் காலத்திலே-பல சூறாவளிகள், பல பேய்க் காற்றுகள் வீசுகின்ற இவ் வேளையிலே - எங்கே பெண்களது மனமும் மாறிவிடுகின்றதோ என்று அஞ்சித்தான், நம் சமாசத்தார் சென்ற சில ஆண்டுகளாகப் பெண்களுக்கென்று ஒரு பகுதியை ஒழித்து வைத்து, ஒருகால் சமயத்தைப் பற்றி மறந்திருந்தாலும் மீண்டும் ஒருமுறைக் கூட்டி ஞாபகப் படுத்தலாம் என்று எண்ணினர் போலும். சைவத் தாய்மார்களே ! உங்கள் சார்பாக அவர்களுக்கு உறுதி கூறுகிறேன். மங்கையர்க்கரசியாரும், திலகவதித் தாயாரும், காரைக்காலம்மையாரும் தோன்றிய நாட்டிலே பிறந்த எங்கள் ஒவ்வொருவர் இரத்தத்திலும் சைவம் ஓடுகின்றது. சமய உணர்ச்சியோடு வாழ்வோம். சமயத்தை வளர்க்கப் பாடுபடுவோம். கடவுள் எண்ணத்தினின்றும் சிறிதும் பிறழாமல் வாழ்க்கையை நடத்த இறைவன் அருள்புரிவானாக.

மங்கையர்க்கரசியார் :— நாம் சமயத்தை வளர்க்கவும் சமய எண்ணத்தோடு வாழவும் மங்கையர்க்கரசியார் சரித்திரமும் திலகவதியார் சரிதமும் துணை புரியும். சைவம் வளர்த்த சோழ அரசனது மகளாகத் தோன்றிப் பாண்டியனால் மணக்கப்பட்ட அரசியார் தினந்தோறும் ஆலயத்திற்குச் சென்றனர்; இறைவனை வழிபட்டனர்; சமணசமயம் சார்ந்திருந்த தன் கணவனை, சம்பந்தரை அழைத்து, மீண்டும் சைவராக்கினர்; அரசனை சைவராக்கியதன் மூலம் பாண்டியநாட்டில் சைவத்தை வளர்த்துச் சம்பந்த சுவாமிகளால் தேவாரத்தில் பாடும் பெருமையும் பெற்றார்கள்; அதோடல்லாது சேக்கிழார் சுவாமிகளால் தெய்வமாகவும் போற்றப்பட்டார்கள் என்றால் அவர்கள் பெருமையை என் சொல்வது!

திலகவதியார் :— திலகவதியாரிடத்துத் திகழ்ந்தது தியாகம். இவர்கள் தன் சொர்க்க சுகத்தையும் கருதாது, அனைத்துயிரும் உய்யத் தன் தம்பியாருக்காக வாழ்ந்தார்கள்; மனைத்தவம் புரிந்தனர்; பரசமயம் புகுந்திருந்த தன் தம்பியாராகிய மருள் நீக்கியார்க்கு மீண்டும் திருநீற்றை ஐந்தெழுத்தை ஓதித் தந்து, அவரை சைவராக்கிய ஓர் அரிய அற்புதத்தைச் செய்து காட்டினர். அப்பர் தேவாரம் நமக்குக் கிடைக்கப் பெற்றது இவர்களாலல்லவா? இவர்களால் தான் அன்று பல்லவ நாட்டில் சைவம் விளங்கியது எனலாம்.

புனிதவதியார் :— இவர்கள் வாழ்க்கையின் மூலம், இவர்களுக்கு ஆண்டவனிடத்து இருந்த ஆழ்ந்த நம்பிக்கையும், இடையறாத பக்தியும் நன்கு விளங்குகின்றன. இறைவனது பரிபூரண அருளைப்பெறப் பக்குவப்பட் டிருந்தனர்; ஒரு நண்பன் மற்றொரு நண்பனை அணுகித் தனக்கு வேண்டியதைப் பெறுவதுபோல் இறைவனை வேண்டிக் கனியைப் பெற்றனர். மற்றும் தன் கணவன் தன்னைக் குலதெய்வமாகக் கருதி விலகிய காலத்தும் எவரும் வெறுக்கும் பேய் வடிவத்தை விரும்பிப் பெற்றனர்; இவர்கள் அறிவுநிலை மிக்க மேம்பாடுற்றிருந்தது. அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை முதலிய நூல்கள் அதற்குச் சான்றாகும். முதல் முதல் பண்ணோடு சேர்த்துப் பாடிய பெருமை

யும் இறைவனால் " அம்மையே " என்றழைக்கப்பட்ட பெருமையும் இவர்களையே சாரும்.

பெரியோர்களே! தாய்மார்களே!

இதுகாறும், இறைவன் சிவமும் சக்தியுமாக இருந்து முத்தொழிலை நடத்தி அடியார்க்கு அருள் புரிகின்றான் என்பதையும், சமயம் வேண்டுமா என்பதையும், சைவம் என்றால் என்ன ? சைவத்தின் பழமை யாது ? சைவத்தின் அடிப்படையான முப்பொருள் உண்மை யாவை ? என்பனவற்றையும், பதி, பசு, பாசங்களின் இலக்கணத்தையும், உயிர் பாசத்தை நீக்கும் வழிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களையும், சைவ சமயத்திற்கு இன்னல் நேர்ந்தபோது உலகிலே தோன்றிப் பணி ஆற்றிய அடியார்கள் சிலர் தொண்டினையும், சைவத்திற்காகவே வாழ்ந்து சைவத்தைப் பரப்பிய சில தாய்மார்கள் வரலாற்றையும் ஒருவாறு அறிந்தோம். இனி பழங் கதைகள் பேசிக்கொண்டே போவதில் பயனில்லை. சைவர்களாகிய நாம் இனிச் செய்யவேண்டிய ஆக்க வேலைகள் என்ன ? நம் கடமை என்ன ? இன்றைய அளவில் சைவர்களாகிய நாம் எப்படி யிருக்கிறோம் ? சைவமானது இனி மேன்மேலும் தழைத்து ஓங்க என்ன என்ன வழிகள் உண்டு என்று சிறிது ஆராய்வோம்.

சைவர்கள் கடமை :— இன்றைய சைவ உலகம் எந்த அளவில் இருக்கிறது என்று பார்க்கப் போனால், ஏதோ விபூதி தரிப்பதும், கண்டிகை அணிவதும், சைவ உணவு கொள்வதும், பிறர் பார்த்துப் புகழக் கண்மூடி செபம் செய்வதுமாக வேடத்தளவில் இருந்து வருவதைக் காணலாம். இந்நிலை மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கிறது. மேற்கூறியவைகளெல்லாம் சைவ சமயத்தின் சின்னங்களே ஒழிய அவையே சைவமாக மாட்டா. சைவத்திற்கே தலைவனான சிவனை " அன்பே சிவம் " என்று சொல்லுகின்றோம். அத்தகைய அன்பு சமயத்தை, அன்பு மதத்தை மக்களிடையே வளர்ப்பதில் எந்த வகையில் நாம் பாடு படுகின்றோம் என்று கருத வேண்டும். அன்பையே அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையைச் செலுத்தினால், தற்போது நாட்டில் நிலவி வரும்

பலவிதப் பஞ்சங்கள் தலைவிரித்தாடுமா? நினைத்துப் பாருங்கள். உண்மைக் கிருஸ்தவன் யார்? என்ற கேள்விக்கு "There was only one true christian and he died at the cross" என்று மறுமொழி கிடைத்ததாம். அதுபோல் உலகிலே உண்மைச் சைவன் யார் என்று பார்க்கப்போனால் கைவிட்டு எண்ணி விடலாம்.

உண்மைச் சைவன் யார்? — கடவுள் ஒருவர் உண்டு என்ற நம்பிக்கை வேண்டும். அவரே இவ்வுலகத்தைப் படைத்தும், காத்தும், அழித்தும் முத்தொழில் செய்கின்றார் என்ற எண்ணம் வேண்டும். நடமாடும் கோயில் அனைத்தும் ஈசன் சந்நிதியாகப் பார்க்கவேண்டும். எல்லா உயிர்களிடத்தும் ஈசன் இருக்கின்றான் என்று கருதி எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். நாம் நடத்தும் வாழ்க்கையினால் பிறருக்கு ஒரு நன்மை செய்யாமல் போனாலும் துன்பமாவது செய்யாதிருத்தல் வேண்டும். ஜாதி, குலம், கோத்திரம், நாடு, மொழி இவைகளிலே வேற்றுமை பாராட்டாமல் பரந்த நோக்கத்தோடும் ஏதேனும் ஒரு நல்ல குறிக்கோளோடும் வாழவேண்டும். கடவுள் எண்ணத்தில் நம்மை ஈடுபடுத்தக்கூடிய நம் சமய நூல்களாகிய 14 சாஸ்திரங்களையும் 12 திருமுறைகளையும் நம்மால் இயன்றவரைப் படித்தே தீரவேண்டும். பலநூல்களைப் படிப்பதன் மூலம், எவ்வளவுதான் ஞானம் கைவரப் பெற்றாலும் கோயில் வழிபாடும் அடியார் வணக்கமும் அவசியம் வேண்டப்படுகின்றன. இவையில்லையென்றால் பயனில்லை.

ஆலயங்கள் ஒழுங்காக இல்லை என்பதனால் ஆலயங்களுக்குப் போகாமல் இருப்பது தவறு. ஆலயங்கள் ஒழுங்காக நடைபெறவிட்டால் அவற்றைத் திருத்தி ஒழுங்குபடுத்த வேண்டியது சைவர்களாகிய நம் கடமையாகும். ஆலயங்களைக் கட்டி வைத்ததும், அதற்கு வேண்டிய சாதனங்களைச் செய்து வைத்ததும் நம்முடைய மூதாதையர் என்பதைத் தமிழன் என்றும் மறக்கக் கூடாது. ஆலய வழிபாடும், அடியார் வணக்கமும் அவசியம் வேண்டற்பாலன என்பதைச் சிவஞானபோதம் 12-ம் சூத்திரம்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ

மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே.

என்ற நூற்பாவினால் மெய்கண்டதேவர் அறிவுறுத்து கின்றார்.

சகிப்புத் தன்மை வேண்டும் :— இன்பம் வந்த காலத்து இறைவனை மறப்பதும், துன்பம் வந்த காலத்து அவனை நினைப்பதும் பல வேண்டுதல்கள் செய்வதும், காணிக்கைகள் செலுத்துவதும் ஆகிய இவையெல்லாம் முறையல்ல. எவ்வளவோ ஞானம் கைவரப் பெற்றவர் களாயிருந்தாலும் துன்பம் வந்த காலத்து, மனம் தளர்ந்து இறைவனை நிந்திக்க முற்படுவது தவறாகும். இறைவனை இன்பத்திலும், துன்பத்திலும் மறக்காமல் இருக்க முயல வேண்டும். சிலர் இறைவனை எப்போதும் நினைத்திருந்த போதிலும், வினையின் காரணமாக மறந்த காலத்தில், அவர்களை மீண்டும் நல் வழிப்படுத்த வேண்டிப் பல துன் பங்கள் வருகின்றன. இறைவன் யாரை அதிகமாக விரும்புகிறாரோ அவர்களுக்கு அதிக தண்டனை கொடுக் கிறார் என்பது ஓர் உண்மை. துன்பத்தையும் இன்பமாகக் கருதுவதே சகிப்புத் தன்மையும், நம் கடமையுமாகும். பொன்னைப் பல தடவை நெருப்பிலிட்டு மாசு நீக்குவது போலப் பல கஷ்டங்களை நமக்கு இறைவன் கொடுத்து நல்வழிப்படுத்தித் தன்பால் அழைத்துக் கொள்கின்றான். சுந்தரமூர்த்தி சுவாமிகளது சரித்திரத்தை விடவா நமக்கு வேறு சான்று வேண்டும்? அவர் பிழை செய்த காலத்து இறைவன் அவரைக் கடுமையாகத் தண்டித்தும், பின்னர்ப் படிப்படியாகக் காத்தும் அருள் புரிந்தாரல்லவா! ஆகவே, இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகக் கருதி ஆண்ட வனிடத்தில் அன்பு செலுத்துவதே முறையாகும். இதையே இருவினை யொப்பு என்றும் சொல்லுவர்.

சமய வளர்ச்சி :—சமய வளர்ச்சிக்காக என்னென்ன ஆக்க வேலையில் ஈடுபடவேண்டும் என்பதைப்பற்றிப் பல தடவை கூடிப் பேசப்படுகின்றதே தவிர, நிலையான வேலை யில் இன்னும் இறங்கினதாகத் தெரியவில்லை.

சமயப் பிரசாரம்:—சைவ சமயப் பிரசாரகர்கள் எண் ணிக்கை அதிகரிக்க வேண்டும். அவர்கள் நாட்டின் பல

பகுதிகளிலே சென்று பிரசாரம் செய்ய வேண்டும். இன்றைய அளவில் இருப்பதுபோல் சைவசமயப் பிரசாரம் இருக்குமேயானுல், அது பயனளிக்குமா ? என்பது சிந்திக்கற்பாலது. சிறு கிராமங்களிலும் நாகரிகம் அதிகமாகக் குடியேருத பல பகுதிகளிலும் இருக்கின்ற மக்களிடம் தான் மற்றச் சமயத்தார் சுலபமாகச் சென்று அவர்களைத் தம் சமயத்திற்கு இன்றும் திருப்பி விடுகின்றனர். அவர்களுக்காக ஒரு மாதாகோயிலைக் கட்டவும் அவர்கள் தயங்கவில்லை. நாமும் அதுபோல் சைவப் பிரசாரகர்களை ஒருவருக்கு இரண்டு அல்லது மூன்று கிராமங்கள் என்று தெரிந்து எடுத்துக் கொடுத்து, ஒருவருஷத்தில்அவர்களுக்குச் சைவப் பிரசாரத்தை வாரத்திற்கு ஒரு முறையோ, இரு முறையோ தொடர்ந்து நடத்தச் செய்ய வேண்டும். அவர்களுக்கு ஒரு வருஷத்திற்கானபிரசாரத்திட்டத்தை சமாஜத்தார் வகுத்துத்தரல் வேண்டும். அதுவன்றிப் பிரசாரகர்கள் சென்ற இடத்திற்கே திரும்பத் திரும்பச் சென்று பேசின பேச்சையே பேசிப்பேசி, அதிகப்படியான பிரசங்கத்தின் எண்ணிக்கை காண்பித்தும், கோயில் மண்டபங்களிலேயே அநேகமாகக் கூட்டங்களை நடத்தியும் வருகிருர்கள்.

கோயிலில் பிரசாரம் வேண்டுமா ? கடவுள் எண்ணம் இல்லாதவனுக்கல்லவா, கடவுள் எண்ணத்தைப் பிரசாரகர்கள் ஏற்படுத்த வேண்டும்? கடவுள் நம்பிக்கையுடையவர்கள்தான் கோவிலுக்கு வரப்போகின்றனர். அவர்கள் படிக்கக் கூடியவர்கள். பல சமய நூல்களைப் படித்து உண்மை அறியும் ஆற்றலுடையவர்கள். ஆனுல் சாதாரண கிராமங்களில் இருக்கும் மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை ஊட்டப் பிரசாரங்கள் வேண்டப்படுகின்றன. கிராமங்களிலும் படிக்கக் கூடிய சிறுவர்களுக்குப் பல தோத்திரங்களைச் சொல்லிக் கொடுக்கலாம். சிறு சமய நூல்களை இவர்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும்.

சைவசமயப் பிரசாரகர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுத்து அவர்களை ஆதரிக்க வேண்டியது, அதிக வருமானம் உள்ள மடத்தாருடைய கடமையும் கோயிலாருடைய கடமையும் ஆகும்.

இலவச வெளியீடு :—மிகச் சுலபமான விலையில் தேவாரத்திரட்டு, திருவாசகத்திரட்டு, சைவ வொழுக்கம் இவை போன்ற ஓர் அணு, இரண்டணு புத்தகங்கள் பிரசாரகர்கள் கையில் நிரம்ப இருக்க வேண்டும். இவைகளை இலவசமாக வழங்க வேண்டும். கிராம மக்களுக்கு இவை மிகவும் பயன்படும்.

தேவார பாடசாலை :—தேவாரம் கற்போர் எண்ணிக்கை வரவரக் குறைவதை நாம் பார்க்கிறோம். அதிகப்படி வருவாய் உள்ள ஆலயங்களைச் சார்ந்தாற்போல் தேவாரப் பாடசாலைகள் நிறுவி அதை ஒழுங்குபட நடத்த வேண்டும். பல பாடசாலைகள் நெற்களஞ்சியங்களாகக் காட்சி அளிக்கின்றன. மற்றும் இந்தப் பாடசாலைகளைச் சார்ந்தாற்போல் பிரசாரகர்களைத் தயார் செய்வதற்கும், ஆலய அர்ச்சகர்களைத் தயார் செய்வதற்கும் இத்தகைய பாடசாலைகள் உபயோகப்பட வேண்டும். மூன்று வருடத்திற்கோ அல்லது நான்கு வருடத்திற்கோ, ஒவ்வொரு வகுப்பினருக்கும் பாடத் திட்டங்களை வகுத்து அதில் தேர்ச்சி பெற்றவர்கள்தான் சைவப் பிரசாரகர்களாகவும், அர்ச்சகர்களாகவும் வேலை ஏற்க வேண்டும்.

இவற்றிற் கெல்லாம் மடங்களும், ஆலயங்களும் ஆதரவு அளிக்கவேண்டும். வருகின்ற வருவாயை இத்தகைய நல்ல முறையில் சைவத்தை வளர்க்கக் கூடிய ஒரு முறையில் செலவு செய்தால், வருவாய்க்குத் தகுந்த செலவு காட்டுவதற்காகப் பொய்க் கணக்கு எழுத வேண்டிய நிபந்தனையே ஏற்படாது. பணம் மிஞ்சாது, பற்றுக்குறையாகும். உபரியாக உள்ள வருவாயை இந்த முறையில் பயன்படுத்தலாம்.

சங்கம் நிறுவல் :—வருஷத்தில் மூன்று நாட்கள் கூடி நமக்குள்ளே தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் போதாது. ஒவ்வொரு ஊரிலும் சென்னையிலுள்ள சைவ சித்தாந்தத்தின் கிளைச் சங்கங்கள் ஏற்பட்டாலொழிய அவர்களுக்கும் மற்றைய சைவ உலகுக்கும் தொடர்பு ஏற்படுவது மிகச் சிரமம். பேசுவதுபோல் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்துவது என்பது அவ்வளவு எளிய காரியமா எனக் கருதலாம். ஒவ்வொரு ஊரிலும் சமயத்தின் சார்பில் ஏதேனும் ஒரு சங்கம் இருந்தே தீர்கிறது. அந்தச் சங்

கத்தை சமாஜத்தோடு சட்ட ரீதியாக இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். எந்தத் துறையிலும் சட்ட ரீதியாக ஒழுங்கு படுத்தினாலன்றி அது வளர்ச்சியடைய முடியாது. இராமகிருஷ்ண மிஷின் போன்ற சங்கங்கள் எப்படித் தன் தலைமைக் காரியாலயத்தைச் சென்னையில் நிறுவி ஒவ்வொரு ஊரிலும் அதன் கிளைச் சங்கங்கள் வேலை செய்கின்றனவோ அதுபோல் சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு ஒவ்வொரு ஊரிலுள்ள சங்கங்களும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு சைவத்தைப் பரப்ப வேலை செய்ய வேண்டும்.

சமய வளர்ச்சிக்கான வேலைகள் நமக்கு எண்ணிறந்தன உள. சமய வளர்ச்சிக்காக நமக்குப் பல விருப்பங்கள் ஏற்படலாம் ; பல மனக் கோட்டைகள் கட்டலாம். ஆனால் அந்த மனக் கோட்டையும் கூடிய விரைவில் உண்மைக் கோட்டையாக ஆகும் காலம் நெருங்கி வருகிறது. அந்தச் சைவக் கோட்டைக்குப் பலமான, அழுத்தமான நான்கு தூண்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அதன் பெருமை அறியாது அதைச் செல்லரிக்க விடமுடியாது. சைவ இளைஞர் உலகமே ! உங்களை வேண்டிக் கொள்கின்றேன். அந்தத் தூண்கள் வயதானது. ஆனால் உரம் மிகுந்தது.

நமது சைவப் பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும், சைவ சமாஜத்தின் தாயும் தகப்பனுமாகிய திருவாளர் மா. பா. அவர்களும், தற்போதைய சித்தாந்த ஆசிரியர் திரு. C. M. ராமச்சந்திரன் செட்டியாரவர்களும், சமாஜக் காரியதரிசி திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்களுமே நாம் இனிக் கட்டப்போகும் சைவக் கோட்டையின் நான்கு தூண்கள்.

அவர்களின் துணை கொண்டு இனி சைவம் மேன் மேலும் பரவ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

சைவத் தாய்மார்களுக்குச் சில வேண்டுகோள்

அன்புமிக்க தாய்மார்களே !

மேற்கூறிய வண்ணம் சைவ சமயப்பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்குச் சைவ மங்கையர்களாகிய உங்களுடைய நன் முயற்சியே உறுதுணையாகும். ஒன்றை

அறிவித்த அளவிலே அதன் நன்மை தீமைகளைத் தெரிந்துகொள்வதும், நன்மையெனத் தெரிந்த ஒன்றை எந்தக் காலத்திலும் விடாது போற்றி வருதலும் பெண்மைக்குரிய இயல்பாகத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. அம்முறையிலேதான் சைவ மங்கையர்களாகிய நாம் நம் முன்னோர் போற்றி 'வளர்த்த சிவநெறியை விடாது மேற்கொண்டு வருகின்றோம். நம்மவரிற் பலர் சைவ சமயத்தைக் கடைப்பிடித்து வந்தாலும், போதிய கல்வியும் சூழ்நிலையும் வாய்க்கப் பெறுமையால் சமயப் பெரியோர் வரலாறுகளையும், சமயவுண்மைகளையுந் தெரிந்து அவற்றைத் தம் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லித் திருத்தும் ஆற்றல் பெறுதுள்ளார்கள். தாய்மார்களாகிய நாம்தான் நம் குழந்தைகளுக்கு முதலாசிரியர்கள். பெரியோரைக் கண்டால் பணிதலும், பெற்றோர் சொல்லிய வண்ணம் நடத்தலும், தெய்வ நம்பிக்கையுடன் நன்னெறியிற் பழகுதலும், சகோதரரிடத்தும் பிறரிடத்தும் அன்பாகப் பழகுதலும், பிறந்த நாட்டினிடத்தும், பேசும் மொழியினிடத்தும் உறுதியான பற்று வைத்தொழுகுதலும், ஆகிய நற்பழக்கங்களெல்லாவற்றையும் குழந்தைகளுக்கு உண்டாக்கும் பொறுப்பு, தாய்மார்களாகிய நமக்கே யுரியதாகும். இப்பொறுப்பினை நாம் சரியாக உணர்ந்து நடந்தால்தான், இந்திய நாட்டின் உரிமை வாழ்வும், குடிமக்களாட்சி முறையும் நன்கு நிலைபெற இயலும்.

உரிமைபெற்ற நாட்டில் வாழும் மக்களனைவரும் தம் உரிமையின் எல்லையையும் அதனைக் காத்தற்குத் தாம் மேற்கொள்ளவேண்டிய கடமையின் பெருமையினையும், இவ்வுலக வாழ்வு எல்லா மக்களுக்கும் பொதுவாக உரிய நிலையில் எல்லாம் வல்ல இறைவனால் வகுத்தளிக்கப் பெற்ற திருவருளின் திறத்தையும் உணர்ந்து சிவனருள்வழி நடந்தால்தான் நாம் பெற்ற உரிமையாட்சி நிலைபெற்ற ஆட்சியாகும்.

அத்தகைய அன்பாட்சி நிலைபெறுதற்கு அடிப்படையாவது இறைவனது திருவருளாட்சியாகும். இத்தகைய திருவருளாட்சிக்குரியவராக இளங்குழந்தைகளைப் பழக்குதலைத் தாய்மார்கள் தான் மேற்கொள்ள முடியும். தம் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய், அவனைப் பெற்ற

பொழுதைக் காட்டிலும் பெருமகிழ்ச்சியடைவாள் எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

சைவ சமயத்திற் பிறந்த குழந்தைகளெல்லோர்க்கும் தாய்மார்களாகிய நாம் சைவ சமயப் பெரியோர் வரலாற்றையும், அவர்கள் அருளிய அருள் மொழிகளையும் அறிவுறுத்தி வருவோமானால் அவர்கள் பழி பாவங்களுக்கு அஞ்சியொழுகிப் புகழென்றால் உயிரையும் பொருட்படுத்தாதுழைக்கும் சான்றோர்களாய்த் திகழ்வார்கள் என்பது உறுதி. இவ்வாறு இளைஞருலகு இறைவன் நம்பிக்கையால் எழுச்சிபெற்று வளருமானால், இந்நாட்டின் சமூக வாழ்வும், அரசியல் வாழ்வும் சிறப்புற்று வளர்ந்து எல்லார்க்கும் நன்மையளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தெய்வ நம்பிக்கையுடையவர்களே வையத்து வாழ்வாங்கு வாழும் நல்ல அரசியலை வகுத்துக் கொடுக்க முடியும். வருகின்ற தேர்தலிலே தெய்வ நம்பிக்கையுடைய சான்றோர்களைத் தெரிந்தெடுப்பது நம் முக்கிய கடமையாகும். ஆகவே, ஞாலம் உய்ய வேண்டியும், நமது நாட்டு மக்கள் உய்ய வேண்டியும் நமது சைவ வாழ்வினைச் சிறப்புறச் செய்வோமாக !

" ஞாலம்நின் புகழே மிகவேண் டுந்தென்
ஆல வாயி லுறையும் எம்ஆதியே "

பெரியோர்களே !

இது காறும் பேசிய பேச்சில் குற்றங்கள் இருக்கலாம். கருத்து வேற்றுமை இருக்கலாம். அவைகளை என்பாற் படுத்தி, குணங்கள் ஏதாவது கிடைப்பின் அவற்றை என் குருநாதராகிய புலிசை ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகளுடைய தோன்றாத் துணையினால்தான் உங்களுக்குக் கூறியிருப்பேன். ஆகையால் குணங்களை அவர் திருவடிகட்கே சமர்ப்பித்து அடியேனை ஆசிர்வதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சிற்றம்பலம்

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

சமாஜ வெளியீடுகள்

		ரூ.	அ.
பெரியபுராணம்—அகராதியுடன்	...	3	0
நாலாயிரதிவ்ய பிரபந்தம்	...	3	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன்	...	1	0
திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 1 0 · திருவாசகம் மூலம்	...	0	4
திருவாசகத் திரட்டு	....	0	6
கந்தரநுபூதி (உரையுடன்) 0 2 முருகன் மூந்நூல்	....	0	3
அப்பர் திரட்டு 6 பை சம்பந்தர் திரட்டு	....	0	1
திருப்போரூர்ச் சந்நிதிமுறை	....	0	12
திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு		7	0
சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்)	...	0	8
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல.	...	0	2

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்)ஒன்று ஒரு ரூபா விதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா விதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

செய்தித் திரட்டு

1. தூத்துக்குடி ஸ்ரீ சங்கரராமேச்சுரப் பெருமான் திருக்கோயிலில் ஞாயிறுதோறும் நடைபெற்றுவரும் கூட்டு வழிபாட்டில் திரு. சித்தாந்தப் பேராசிரியர் - ந. சிவகுருநாத பிள்ளையவர்கள், எல்லா ஞான நூல்கட்கும் தலையாய சிவஞானபோத நூற்பொருள்களை யாவரும் இனிதுணர்ந்து கொள்ளும் எளிய முறையில் சொல்லி வருகின்றார்கள். இப்பொழுது முதற் சூத்திரம் இரண்டாம் அதிகரணம் நடைபெறுகின்றது. ஆடவரும் மகளிரும் திரளாகக் கூடி அன்புடன் வருகின்றனர்.

2. திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகம், சைதாப்பேட்டை: 24-2-52 ஞாயிறு கழகச் சார்பில் நடைபெற்ற தமிழர் திருநாள் விழாவில், உயர்சிவத்திரு. சைவப் பெரும் புலவர் - ம. பாலசுப்பிரமணிய முதலியார், B.A., B.L., அவர்கள் தம் தலைமையுரையில், தற்காலத்தில் சிவநெறியின் இழிநிலை குறித்தும், எவ்விதம் கோயில்கள், மடங்கள் ஓம்ப வேண்டும் என்றும் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் சைவப் புலவர் - முருகவேள், B.O.L., அவர்கள் சைவ சமயத் தொன்மை குறித்தும், அது உலகெங்கணும் முன்னாள் பரவி இருந்தது என்றும், இந்நாளில் தமிழ் நாட்டிற்கே உரியதா? எனும் சீர்கெட்ட நிலையில் உள்ளதென்றும், அதனை எவ்விதம் பரப்புதல் வேண்டும் என்றும் விளக்கினார்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 20, Sadaiyappa Mudali Street, Saidapet, Madras-15, P.I.Card No. M. S. 81.